




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM · VARALARUU · PUDUGAIVARALARU · VARALARUU · 7502051351








சனி ❖ பிப்ரவரி. 17, 2024 · சென்னை & புதுக்கோட்டை · 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 130 ❖ ரூ.10


### பெரும்பான்மை இருந்தும் டெல்லி பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு

# அறிவிப்பு

## டெல்லி தேர்தலில் வெற்றி பெறவே முடியாது என்று தெரிந்ததால், டெல்லி அரசை கவிழ்க்க நினைக்கிறார்கள். எங்கள் எம்.எல்.ஏ.க்கள் யாரும் பிரிந்து செல்லவில்லை; கேஜ்ரிவால்

**புதுடெல்லி , பிப். 17–**

டெல்லி சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை கொண்டு வந்தார் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால். டெல்லி அரசைக் கவிழ்க்க பாஜக முயற்சி செய்து வருவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.



டெல்லியில் ஆம் ஆத்மி ஆட்சி நடைபெற்று வருகிறது. டெல்லியில் உள்ள 70 சட்டமன்ற தொகுதிகளில் ஆம் ஆத்மிக்கு 62 இடங்களும், பாஜகவுக்கு 8 இடங்களும் உள்ளன. இருப்பினும், ஆம் ஆத்மி சட்டமன்ற உறுப்பினர்களை பாஜக தங்கள் பக்கம் இழுக்க முயற்சித்து வருவதாகவும், அதன்மூலம் டெல்லி அரசை கவிழ்க்க வாய்ப்புள்ளதாகவும் அரவிந்த் கேஜ்ரிவால் குற்றம்சாட்டியிருந்தார். இந்நிலையில், கேஜ்ரிவால் ஒரு திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது அரசியல் களத்தில் கவனம் பெற்றுள்ளது.

டெல்லி சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தைக் கொண்டு வந்தார் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால். நேற்று நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தில், தனது அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை அரவிந்த் கேஜ்ரிவால் தாக்கல் செய்தார். அதன்படி, டெல்லி சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானம் மீது இன்று விவாதம் நடைபெற உள்ளது.

நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை தாக்கல் செய்துவிட்டு, அரவிந்த் கேஜ்ரிவால் பேசும்போது, "பொய் வழக்குகள் பதிவு செய்து மற்ற மாநிலங்களில் கட்சிகள் உடைவதையும், அரசுகள் கவிழ்வதையும் பார்க்கிறோம். அதுபோன்று, டெல்லியில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர்களை மதுபான கொள்கை வழக்கில் கைது செய்ய நினைக்கிறார்கள். டெல்லி தேர்தலில் வெற்றி பெறவே முடியாது என்று தெரிந்ததால், டெல்லி அரசை கவிழ்க்க நினைக்கிறார்கள். எங்கள் எம்.எல்.ஏ.க்கள் யாரும் பிரிந்து செல்லவில்லை, அவர்கள் அனைவரும் அப்படியேஇருக்கிறார்கள் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்த, நான் நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை முன்வைக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

ஹேமந்த் சோரன் போலவே டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலும் அமலாக்கத் துறையின் சம்மன்களைத் தொடர்ந்து புறக்கணித்து வருகிறார். டெல்லி மதுபான கொள்கை வழக்கு விசாரணைக்காக ஆஜராகும்படி, ஆறு முறை அவருக்கு சம்மன் அனுப்பப்பட்டது. ஆனால், சட்டவிரோதமாக சம்மன் அனுப்பப்பட்டதாகக் கூறி அரவிந்த் கேஜ்ரிவால் விசாரணைக்கு இதுவரை ஆஜராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## புதுக்கோட்டையில் 73 ஏழைப்பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கத்தினை சட்டத்துறை அமைச்சர் வழங்கினார்

**புதுக்கோட்டை , பிப். 17–**

புதுக்கோட்டையில் 73 ஏழைப்பெண்களுக்கு ரூ.29.75 இலட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கத்தினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 73 ஏழைப்பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கத்தினை, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா,தலைமையில்நேற்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பெண்கள் வாழ்க்கை முன்னேற்றம் அடைவதற்காக எண்ணற்றத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைசார்பில்ஏழை, எளிய பெண்களுக்காக பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், ஏழைப்பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்பட்டது.

அதன்படி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித்திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கானதிருமண நிதியுதவித்திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமணம் திருமணநிதியுதவித்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கம் ஏழைப்பெண்களுக்கு வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 2023-2024 ஆம்நிதியாண்டிற்குகூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு பட்டம் மற்றும் பட்டயம் படித்த 46 பெண்களின் திருமணத்திற்கு தலா ரூ.50,000/-வீதம்ரூ.23,00,000/- மற்றும் தலா 8 கிராம் தங்கம் வீதம் 368 கிராம் தங்கமும், ஏனைய 10-ம் வகுப்பு வரை படித்த 27 பெண்களுக்கு ரூ.25,000/- வீதம் ரூ.6,75,000/- மற்றும் தலா 8 கிராம் தங்கம் வீதம் 216 கிராம் தங்கமும் என மொத்தம்73பெண்களுக்கு ரூ.29,75,000 நிதியுதவி தொகையும், 584 கிராம் தங்கமும் இன்றையதினம் வழங்கப்பட்டது. என தெரிவித்தார்.

முன்னதாக, தமிழ்நாடு மாநில ஊரக (ம) நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள மதி சிறு தானிய உணவகத்தினை இன்றையதினம் திறந்து வைத்துபார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன்,நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய்கோட்டாட்சியர் ஐஸ்வர்யா, மாவட்ட சமூகநல அலுவலர் கோகுலப்பிரியா, நகர்மன்றத் துணைத் தலைவர் லியாகத் அலி, உதவித் திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) ராஜாமுகமது, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், தொழில் கூட்டுறவு அலுவலர் மனோகரன், உள்ளாட்சிஅமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

## காங்கிரஸ் கட்சியின் வங்கி கணக்குகள் முடக்கம் வருமான வரித்துறை மீது அஜய் மக்கான் புகார்

**புதுடெல்லி : பிப். 17–**

தேர்தல் பத்திரங்கள் திட்டத்தைஉச்சநீதிமன்றம் ரத்து செய்த மறுநாள் காங்கிரஸ் கட்சியின் வங்கி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின்பொருளாளர் அஜய் மக்கான் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுதொடர்பாக புதுடெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த அஜய் மக்கான், "நாங்கள் அளிக்கும் காசோலையை வங்கிகள் வாங்குவதில்லை என்று நேற்று முன்தினம் வியாழக்கிழமைஎங்களுக்கு தகவல்தெரிவிக்கப்பட்டது. இது குறித்து விசாரிக்கையில், இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இளைஞர் காங்கிரஸ் என காங்கிரஸ் கட்சியின் 4 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. வங்கிக் கணக்குகள் வருமான வரித் துறையால் முடக்கப்பட்டுள்ளன.




2018-19ம் நிதியாண்டுக்கானகணக்கை 45 நாட்கள் தாமதமாக தாக்கல் செய்ததால் வங்கிக் கணக்குகளை முடக்கியத்துடன் ரூ.210 கோடி அபராதமும் வருமான வரித்துறை விதித்துள்ளது. பொதுமக்கள் நன்கொடை அளிக்கும் வகையில் உள்ள எங்களின் கிரவுட் ஃபண்டிங் வங்கி கணக்கும் முடக்கப்பட்டுள்ளது. இந்த முடக்கத்தால் எங்களால் பணத்தைஎடுக்கமுடியாது. இதுவெறும்வங்கிக்கணக்கு முடக்கமல்ல, ஜனநாயகம் முடக்கப்பட்டுள்ளது. தேர்தல்அறிவிப்புவெளியாக இன்னும்ஒருமாதமேஉள்ள நிலையில்,எதிர்க்கட்சிகளின் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பது ஜனநாயகத்தை முடக்குவதற்கு சமம்" என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

---

## முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமின் மனு மீது உயர்நீதிமன்றம் புதன்கிழமை விசாரணை

**சென்னை : பிப். 17–**

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமின் மனு மீது உயர்நீதிமன்றம் புதன்கிழமை விசாரணை நடத்தவுள்ளது.



சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்ட வழக்கில், அமைச்சர் செந்தில் பாலாஜி, கடந்த ஆண்டு ஜூன் 14ம் தேதி அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக சுமார் மூவாயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை மற்றும் ஆவணங்கள், 27 சாட்சிகளின் வாக்குமூலங்களுடன் கடந்த ஆகஸ்ட் 12ம் தேதி அமலாக்கத் துறையால் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனிடையேசெந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 15வது முறையாக, ஜனவரி 22ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. இதேபோல் செந்தில் பாலாஜி, ஜாமீன் கேட்டு 3-வது முறையாக மனுதாக்கல் செய்திருந்த நிலையில், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி, ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 17வது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் செந்தில் பாலாஜி தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி ஜாமின் கோரிய மனு மீதான விசாரணையை புதன்கிழமை (பிப்.21) விசாரிக்க நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் ஒப்புதல் அளித்துள்ளார். வழக்கின் விசாரணை திங்கட்கிழமைக்கு பதிலாகபுதன்கிழமைக்கு விசாரிக்கவேண்டுமென மூத்த வழக்கறிஞர் ஆரியமா சுந்தரம் முறையீட்டைஏற்றுநீதிபதி ஒப்புதல் அளித்துள்ளார்.

---

## தமிழக பாஜக மக்களவைத் தேர்தல் பொறுப்பாளர் அமர்பிரசாத் ரெட்டி நியமனம்: பாஜக அறிவிப்பு

**சென்னை : பிப். 17–**

தமிழகத்தில் பாஜக மக்களவை தேர்தல் பொறுப்பாளராக பாஜக விளையாட்டுபிரிவுமாநில தலைவர் அமர்பிரசாத் ரெட்டி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



39 மக்களவை தொகுதிகளிலும், ஒவ்வொரு தொகுதிக்கும் பொறுப்பாளர்கள், அமைப்பாளர்களை பாஜக நியமித்துள்ளது. ஒவ்வொரு பொறுப்பாளர்களும், பூத் கமிட்டி வலுப்படுத்துதல், மக்கள் சந்திப்பு, வாக்கு சேகரிப்பு என பல்வேறு பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், தமிழக பாஜகமக்களவை தேர்தல் பொறுப்பாளராக பாஜக விளையாட்டு பிரிவு மாநில தலைவர் அமர்பிரசாத் ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே, என் மண் என் மக்கள் யாத்திரையின் இணை பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த நிலையில், நடைபயணம் முடியும் தருவாயில், அமர்பிரசாத் ரெட்டிக்கு தற்போது, தமிழக பாஜக மக்களவை தேர்தல் பணிகளுக்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவரது தலைமையின் கீழ், ஊடக பிரிவு, விருந்தினர் ஒருங்கிணைப்பு பிரிவு, தலைவர்கள் பிரச்சார பிரிவு, எஸ்சி, எஸ்டிபிரிவு, மத்திய அரசின் திட்ட பிரிவு, மகளிர் பிரிவு என 30 பிரிவுகள் செயல்பட இருக்கின்றன. மக்களவைத் தேர்தல் மட்டுமல்ல, வர இருக்கும் சட்டப்பேரவை தேர்தலுக்கும் சேர்ந்து இதே குழுக்கள் பணி செய்ய இருப்பதாக பாஜகவினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், வரும் 17, 18-ம் தேதிகளில் மக்களவைத் தேர்தல் தொடர்பான ஆலோசனை கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடக்கிறது. இந்த கூட்டத்தில் மக்களவை தேர்தல் கூட்டணி தொடர்பான பல முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### துவாக்குடியில் புதிய சுங்கச் சாவடிக்கு எதிர்ப்பு

## மத்திய அரசை கண்டித்து வரும் 23ம் தேதி அதிமுக ஆர்ப்பாட்டம் : எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, பிப். 17–**

துவாக்குடியில் புதிய சுங்கச் சாவடிக்கு எதிர்ப்பு தெரிவித்து மத்திய அரசை கண்டித்து அதிமுக சார்பில் வரும் 23ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கை: திருச்சி-தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் (நெ.சா.67), வாளவந்தான் கோட்டையில் அமைந்துள்ள சுங்கச் சாவடியானது சுமார் 13 வருடங்களுக்கு மேலாக சுங்கக் கட்டணம் வசூல் மையமாக செயல்பட்டு வரும் நிலையில், துவாக்குடி முதல் ஜீயபுரம் வரையிலான 24 கிலோ மீட்டர் கொண்ட அரைவட்ட சுற்றுச் சாலையின் தொடக்கத்திலேயே, வாளவந்தான்கோட்டை சுங்கச் சாவடிக்கு அரை கிலோ மீட்டர் இடைவெளி கூட இல்லாமல்,துவாக்குடியில் புதிதாக சுங்கச் சாவடி அமைக்கப்படுவதை அறிந்து, மத்திய அரசு விதிகளின்படி அருகருகே இரண்டு சுங்கச் சாவடி அமைக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்டி அதிமுக சார்பில் திருச்சி புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் குமார் மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியதோடு, 60 கிலோ மீட்டர்இடைவெளிக்குள் இருக்கும் சுங்கச் சாவடிகள் மூன்று மாதங்களுக்குள் அகற்றப்படும் என்று 2022ம் ஆண்டு மக்களவையில் நடைபெற்ற விவாதத்தின்போதுதுறை அமைச்சர் கூறியதை மேற்கோள் காட்டி, மீண்டும்துறை அமைச்சர் நிதின் கட்கரிக்கும், தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் பார்வைக்கு கடிதம்எழுதி உள்ளதோடு, இக்கோரிக்கையை நிவர்த்தி செய்திட கழகத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டும் வந்துள்ளது.



இந்நிலையில், தற்போது சுங்கச் சாவடி பணிகள் முடிவுற்றுபிப்.14ம் தேதிமுதல் சோதனை முறையில் கட்டணங்கள் அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாக வாகனங்களில் பயணிக்கும் மக்கள் அரை கிலோ மீட்டருக்குள் இரண்டுமுறை சுங்கக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. பொதுமக்களை நேரடியாக பாதிக்கின்ற வகையில், அரசு விதிகளுக்குப்புறம்பாகவும், மக்களவையில் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் கொடுத்த வாக்குறுதிக்கு எதிராகவும் செயல்பட்டு வரும் மத்திய அரசையும், தேசிய நெடுஞ்சாலைகள் ஆணைய நிர்வாகத்தை கண்டித்தும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள சுங்கச் சாவடியை அகற்ற வலியுறுத்தியும், அதிமுக திருச்சி புறநகர் தெற்கு மாவட்டத்தின் சார்பில், வரும் 23ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5மணியளவில்,துவாக்குடி பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தலைமையிலும், திருச்சி புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் குமார் முன்னிலையிலும் நடைபெறும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இன்று

17-2-2024

வடவள்ளி காட்டு விநாயகர் கோயில் – திருமணத் தடை நீங்கும்.
சக வருடம் 1945 மாகம் 28

| சோபகிருது மாசி 5 | FEB - SAT சனி | ஷஃபான் 6 வளர்பிறை 048 / 318 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர். அஷ்டமி 18.17 (மா. 01.52) கார்த்திகை 18.42 (மா. 02.02) தியாஜ் 58.30 அமிர்த. திருச்செந்தூர் ஸ்ரீமுருகப் பெருமான் தங்கமுத்துக் கிடா வாகனத்திலும், அம்பாள் வெள்ளி அன்ன வாகனத்திலும் பவனி. மதுரை ஸ்ரீகூடலழகர் கள்ளர் திருக்கோலமாய் காட்சி.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.30-5.30 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்; கும்ப லக்கனம் இருப்பு நா. 4 வி. 07; சந்திராஷ்டமம்: ஹஸ்தம் சித்திரை; கரணம்: 12-1.30; சூரிய உதயம்: 6.33

இராசிபலன்: மேஷம் - பக்தி; ரிஷபம் - பெருமை; மிதுனம் - சுகம்; கடகம் - மேன்மை; சிம்மம் - தோல்வி; கன்னி - மறதி; துலாம் - தேர்வு; விருச்சி - வரவு; தனுசு - சுகம்; மகரம் - எதிர்ப்பு; கும்பம் - தேர்ச்சி; மீனம் - அனுகூலம்

கந்தோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

உயிராய் நீயும்
உடலாய் நானும்
என்றும் இணை பிரியாமல்
காதலால் வாழ்ந்திடும்
வரம் வாய்த்திடுமோ...
என் உயிரே...!!


புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை- 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,810 | Rs. 6,280 |


# புதுக்கோட்டையில் மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளைக் கண்டித்து தொழிலாளர்கள், விவசாயிகள் மறியல் போராட்டம் – 872 பேர் கைது



புதுக்கோட்டை : பிப்.17-

மோடி தலைமையிலான மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளைக் கண்டித்து அனைத்துத் தொழிற்சங்கம் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் சார்பில் புதுக்கோட்டையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 660 பெண்கள் உட்பட 872 பேர் கைது செய்யப்பட்டனர்.

தொழிலாளர் சட்டத் தொகுப்பு நான்கையும் கைவிட வேண்டும். மின்சார திருத்தச் சட்டம் 2020-ஐ திரும்பப் பெற வெண்டும். பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கக் கூடாது. வருமானவரி செலுத்த முடியாத அளவுக்கு வருவாய் இல்லாத குடும்பங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்க வேண்டும். மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டும்.

மாநில தொழிலாளர் நல வாரியங்களை சீர்குலைக்காதே. அங்கன்வாடி, சத்துணவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமும், சமூகப் பாதுகாப்பும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்துத் தொழிற் சங்கத்தினர் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் சார்பில் புதுக்கோட்டை மாவட்ட தலைமை தபால் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

போராட்டத்திற்கு தொமுச மாவட்டச் செயலாளர் கி.கணபதி, ஐக்கிய விவசாயிகள் முன்னணயின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு.மாதவன் ஆகியோர் தலைமை வகித்தனர். சிஐடியு மாநில செயலாளர் ஏ.ஸ்ரீதர், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் ப.ஜீவானந்தம், ஐக்கிய விவசாயிகள் முன்னணி துணை ஒருங்கிணைப்பாளர் ஏ.ராமையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொமுச மாவட்டத் தலைவர் அ.ரெத்தினம், தொமுச போக்குவரத்து மண்டலச் செயலாளர் எம். வேலுச்சாமி, சிஐடியு மாநில செயலளார் எஸ்.தேவமணி, விதொச மாநில செயலாளர் எஸ்.சங்கர், சிஐடியு மாவட்டத் தலைவர் கே.முகமதலிஜின்னா, பொருளாளர் எஸ். பாலசுப்பிரமணியன், ஏஐடியுசி மாவட்ட துணைத் தலைவர் கே.ஆர்.தர்மராஜன் மற்றும் நிர்வாகிகள் க.சுந்தர்ராஜன், கே.சண்முகம், எஸ்.சிவராஜ், விஜயலெட்சுமி, செல்வி, மணிமாறன், சித்தையன் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர். இதில், 660 பெண்கள் உட்பட 872 பேரை போலீசார் கைது செய்தனர்.

# "உதகையில் தோடர்கள் தங்களது பாரம்பரியத்தை கைவிடாததில் மகிழ்ச்சி" – ஆளுநர் ஆர்.என்.ரவி



உதகை : பிப். 17-

"தோடர்கள் நவீனத்தை நோக்கி முன்னேறினாலும் தங்களது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை கைவிடாதது மகிழ்ச்சி அளிக்கிறது" என ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் ஆர். என். ரவி 3 நாள் பயணமாக நீலகிரி மாவட்டம் உதகை சென்றுள்ளார். உதகை ராஜ்பவன் மாளிகையில் தங்கியுள்ள அவர் நேற்று காலை தோடரின மக்களின் தலைமை மந்தமான முத்தநாடு மந்துவுக்கு சென்றார். அவரை தோடரின மக்கள் தலைவர் மந்தரஷ் குட்டன் மற்றும் தலைவர்கள் வரவேற்றனர். அவர் மற்றும் அவரது மனைவிக்கு தோடரின மக்களின் பாரம்பரிய புத்துக்குளி சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் அவர், அங்குள்ள தோடர் மக்களின் குலதெய்வ கோயிலான முன்போ மற்றும் ஓடையாள் வளகோயில்களை பார்வையிட்டார்.

பின்னர் ஆளுநர் ரவி மற்றும் அவரது மனைவி, தோடர் இளைஞர் இளவட்ட கல்லை தூக்கியதைக் கண்டு ஆச்சரியப்பட்டு ஆரவாரம் செய்தனர். அவர்கள் இருவரும், அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த தோடர் மக்களின் கைவினை பொருட்களை பார்வையிட்டனர். பிறகு, தோடரின மக்களின் பாரம்பரிய நடனத்தை கண்டு ரசித்தனர். இதையொட்டி, ஆளுநர் ரவி தோடர் மக்களுடன் அவர்களுடன் கைகோர்த்து பாரம்பரிய நடனம் ஆடினார்.

அவர்கள் மத்தியில் பேசிய ஆளுநர் ரவி, "தோடர்கள் நவீனத்தை நோக்கி முன்னேறினாலும் தங்களது பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை கைவிடாதது மகிழ்ச்சி. இது தான் இந்தியா. மக்கள் வளர்ச்சி அடைந்தாலும் தங்களது அடிப்படையை விட்டுவிட கூடாது. ஆல்வாஸ் தோடரின மக்களின் கிராமங்கள் மற்றும் மக்களின் வாழ்க்கை முறை குறித்த புகைப்படங்களை காண்பித்தபோது, இங்கு வர வேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது. அதனடிப்படையில் இன்று (நேற்று-பிப்.16) இங்கு வந்து உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இங்குள்ள உங்களின் கோயில்களை பார்வையிட்டதை புனித யாத்திரையாக கருதுகிறேன். என்னையும் எனது மனைவியையும் நீங்கள் உபசரித்தது எனது பாக்கியமாக கருதுகிறேன். இதற்கு உங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

சுமார் ஒரு மணி நேரம் முதல் நாடு பந்தில் நேரத்தை செலவிட்ட ஆளுநர் பின்னர் பகல் 12.30 மணியளவில் ராஜ்பவனுக்கு புறப்பட்டு சென்றார். ஆளுநர் வருகையை முன்னிட்டு முத்தநாடு பந்து பகுதியில் எஸ்பி பல.சுந்தரவடிவேல் தலைமையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



தென்காசி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சிக்கு உட்பட்ட 1-வது வார்டு பகுதி மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள காட்டு விலங்குகள் அச்சுறுத்தும் பகுதியான கருப்பாநதி அணைக்கட்டு பகுதியில் வாழும் கலைமான் நகர் மலைவாழ் மக்களின் பழங்குடியினரின் நீண்ட நாள் கோரிக்கையான மலை பளியர் இன மக்கள் வசிக்கும் தெருவிற்கு 6 தெருவிளக்கு அமைத்து தர வேண்டி கோரிக்கை முன் வைத்தனர், இதனை கருத்தில் கொண்டு மலைவாழ் மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. மேலும் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரம் பொருளாதார மேம்பாட்டு அடிப்படை வசதிகளும் கோரிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றி தருவதாக கடையநல்லூர் நகர்மன்ற உறுப்பினர் ரேவதி பாலீஸ்வரன் உறுதி அளித்துள்ளார்.

# வானிலை மாற்றத்தை துல்லியமாக கண்டறியும் இன்சாட்–3டிஎஸ் செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதற்கான கவுண்டவுன் தொடங்கியது



பெங்களூரு : பிப். 17-

வானிலை முன்னறிவிப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை ஆய்வுகளுக்கான இன்சாட்-3டிஎஸ் செயற்கைகோள் ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் இன்று விண்ணில் ஏவப்படுப்படுகிறது. இதற்கான 27.30 மணி கவுன்ட்டவுன் பிற்பகல் 2.05 மணிக்கு தொடங்கியது.

வானிலை மாறுபாடுகளை கண்காணித்து பேரிடர் காலங்களில் உதவுவதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) சார்பில் இன்சாட் வகை செயற்கைகோள்கள் விண்ணில் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வானிலை ஆய்வுக்கான அதிநவீன இன்சாட்-3டிஎஸ் எனும் செயற்கைகோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. ஏற்கெனவே, விண்ணில் செயல்பாட்டில் உள்ள இன்சாட்-3டி மற்றும் இன்சாட்-3டிஆர் செயற்கைகோளின் தொடர்ச்சியாகவே இந்த இன்சாட்-3டிஎஸ் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

இந்த செயற்கைகோள், ஜிஎஸ்எல்வி எப்-14 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் 2-வது ஏவுதளத்தில் இருந்து இன்று மாலை 5.35 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது. இன்சாட் செயற்கைகோள் பாகங்கள் மற்றும் இறுதிகட்ட சோதனைகள் பெங்களூரில் உள்ள இஸ்ரோ ஆய்வு மையத்தில் கடந்த மாதம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த திட்டத்திற்கான செலவு முழுவதும் மத்திய புவி அறிவியல் அமைச்சகம் செய்துள்ளது. செயற்கைக்கோள் தயாரிப்பில் இந்திய தொழில் நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன. மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய கடல்சார் ஆய்வு மையம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இந்த செயற்கைகோள் தகவல்கள் மூலம் பயனடையும்.

இந்த செயற்கைகோளில் 6 சேனல் இமேஜர்கள் உட்பட 25 விதமான ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் புவியின் பருவநிலை மாறுபாடுகளை உன்னிப்பாக கண்காணித்து வானிலைக்கான தகவல்களை துல்லியமாக நிகழ் நேரத்தில் வழங்கும். இதன் மூலம் புயல், கனமழை உட்பட இயற்கை பேரிடர்களை முன்கூட்டியே அறிந்து தேவையான முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாத இறுதியில் இன்சாட்-3டிஎஸ் செயற்கைகோள் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவிற்கு கொண்டு வரப்பட்டது. இதையடுத்து சோதனை மேற்கொள்ளப்பட்டு கடந்த பிப்.11ம் தேதி ஏவுதளத்திற்கு கொண்டவரப்பட்டது. இதன் இறுதிகட்ட பணிக்கான 27.30 மணி நேர கவுன்ட்டவுன் நேற்று மதியம் 2.05 மணிக்கு தொடங்கியது என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்களுடன் முதல்வர் திட்டப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை சென்னையில் வழங்கியதை தொடர்ந்து, தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வேலூர் மாவட்டம் அணைக்கட்டு வட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களில் தீர்வு காணப்பட்டுள்ள மனுக்களுக்குரிய 514 பயனாளிகளுக்கு ரூ.3.24 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை அணைக்கட்டு டி.வி.ஆர். மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் து.மு. கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், வி.அமுலு விஜயன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு. பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதாஆனந்தகுமார், துணை மேயர் மா. சுனில்குமார், அணைக்கட்டு ஒன்றியக்குழுத் தலைவர் சி. பாஸ்கரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் பிடாரி அம்மன் கோவில் அருகில் இந்திய தேர்தல் ஆணையம், புதுக்கோட்டை மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவின் பேரில் வாக்காளர் சரி பார்ப்பு, காகித தணிக்கை முறை, வாக்காளர் இயந்திரத்தில் பொதுமக்கள் வாக்களித்து வேட்பாளரின் வரிசை எண், பெயர், சின்னம் ஆகியவை அச்சிட்டு திரையில் வருவதை சரி பார்த்து உறுதி செய்ய வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. வாக்காளர்கள் வாக்களித்து விழிப்புணர்வு பெற்றனர்.

# விவசாயிகள் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய மத்திய அரசை வலியுறுத்தி ஐக்கிய விவசாயிகள் முன்னணி தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்



மணப்பாறை : பிப். 17-

மணப்பாறை பேருந்து நிலையம் அருகில் ஐக்கிய விவசாயிகள் முன்னணி தொழிற்சங்கங்கள் இணைந்து விவசாய விலை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை உத்திரவாதப்படுத்தி சட்டம் இயற்றிட, விவசாயிகள் வாங்கிய கடனை ஒரு முறை முழுமையாக தள்ளுபடி செய்திட, ஸ்மார்ட் மீட்டர் பொருத்தி மின்சார வாரியத்தை தனியாருக்கு கொடுத்து விவசாயிகளின் இலவசம் மின்சாரத்தை பறிக்கும் மின்சார சட்டத்தை வாபஸ் பெற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ. 26 ஆயிரமாக சட்டம் இயற்றிட, தொழிலாளர்கள் போராடிப் பெற்ற 44 பாதுகாப்பு சட்டங்களை ரத்து செய்து நான்கு தொகுப்புகளாக கொண்டு வந்ததை திரும்ப பெற உட்பட பதினாறு அம்ச கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ராஜேந்திரன் சீனிவாசன் தலைமை வகித்தனர். தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் இந்திரஜித், மாவட்ட செயலாளர்கள் பழனிச்சாமி, சிதம்பரம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஏ.ஐ.டி.யு.சி. சுப்பிரமணி, சி.ஐ.டி.யு. ஷாஜகான் உட்பட ஐக்கிய விவசாயிகள் முன்னணி, அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் மத்திய அரசை கண்டித்து வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

# வட்டாட்சியரை தாக்கியதாக தொடரப்பட்ட வழக்கில் மு.க.அழகிரி உள்ளிட்ட 17 பேர் விடுதலை



மு.க.அழகிரி உள்ளிட்ட 21 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

மதுரை : பிப். 17-

மு.க.அழகிரி உள்ளிட்ட 17 பேரை விடுதலை செய்வதாக நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

'கடந்த 2011-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்தின்போது முன்னாள் மத்திய மந்திரி மு.க.அழகிரி தரப்பினர் தாக்கியதாக மேலூர் தேர்தல் அதிகாரியும் தாசில்தாருமான காளிமுத்து போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் மு.க.அழகிரி உள்ளிட்ட 21 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை மதுரை மாவட்ட ஜே.எம். 1 நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக 21 பேரில் 4 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு நேற்று வெளியானது. அதில், மு.க.அழகிரி உள்ளிட்ட 17 பேரை விடுதலை செய்வதாக நீதிபதி முத்துலட்சுமி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். இந்த வழக்கின் சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறியதை அடுத்து, போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் 17 பேரையும் விடுதலை செய்வதாக நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

# "தேர்தல் பத்திரம் திட்டம் ரத்தால் பாஜகவுக்கு இழப்பு இல்லை" திமுகவுடன் ஒப்பிட்டு அண்ணாமலை பதில்



சென்னை : பிப். 17-

"பாஜக இந்தியா முழுவதும் இருக்கிற ஒரு கட்சி. ஆனால், தமிழகத்தில் மட்டுமே இருக்கக் கூடிய திமுகவுக்கு ரூ.600 கோடிக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி வந்துள்ளது. பாஜகவுக்கு ஒரு மாநிலத்துக்கு சராசரியாக ரூ.212 கோடி தேர்தல் பத்திரம் மூலம் நிதி வந்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துவிட்டதால் பாஜகவுக்கு எந்த இழப்பும் இல்லை" என்று அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

சென்னையில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "பிரதமர் தமிழகம் வருவதற்கு முன்பாக, என் மண் என் மக்கள் யாத்திரை 234 தொகுதிகளிலும் முடித்திருப்போம். சென்னையில் காவல் துறை அனுமதி இல்லை. எனவே, இங்குள்ள 20 தொகுதிகளில் மட்டும் மக்களை உள் அரங்கு கூட்டங்களில் சந்தித்து வருகிறோம். இந்த யாத்திரையின் இறுதி நிகழ்வு பல்லடத்தில் நடைபெறுவது உறுதி. என் மண் என் மக்கள் யாத்திரையின் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பிரதமர் பல்லடத்துக்குத்தான் வருகிறார். அதில் எந்த மாற்றமும், சந்தேகமும் இல்லை. ஆனால், எந்த தேதியில் வருகிறார் என்பதை இரண்டு, மூன்று நாட்களில் அறிவிக்கிறோம். காரணம், பிரதமர் அரசு நிகழ்ச்சியிலும் பங்கேற்பதற்கான வாய்ப்பு இருக்கும்போது, அந்த தேதியையும் இறுதி செய்த பின்னர்தான், தேதியை அவர்கள் அறிவிப்பார்கள்" என்றார்.

அப்போது நடிகை கவுதமி அதிமுகவில் இணைந்தது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "தேர்தல் நேரத்தில் சிலர் அந்தக் கட்சியில் இணைவார்கள். சிலர் இந்த கட்சியில் இணைவார்கள். இது புதிதல்ல. கவுதமி ராஜபாளையத்தில் போட்டியிட கட்சி வாய்ப்பு தருவதாக கூறியிருந்ததாகவும், ஆனால், வாய்ப்பு தரவில்லை என்று சொல்லியிருந்தார். இன்று அவர் அதிமுகவில் இணைந்துள்ளார். சில விஷயங்களை வெளிப்படையாக வெளியே பேசுவது நல்லதல்ல.

பிரதமரின் தமிழக வருகையின்போது இன்னும் நிறைய பேர் பாஜகவில் இணையப் போகின்றனர். பாஜகவில் இருந்து மாற்றுக் கட்சிக்கு செல்பவர்களுக்கு எனது வாழ்த்துகள். அதேபோல், பிற கட்சிகளில் இருந்து பாஜகவில் இணைந்தால், அவர்களுடைய பழைய கட்சியைக் குறித்து யாரும் பேச வேண்டும் என்று கட்சியினரிடம் நான் கூறியிருக்கிறேன். எனவே, மக்கள் வருவதும் போவதும் சகஜம்தான்" என்றார்.

தேர்தல் பத்திரம் திட்டத்தை ரத்து செய்த உச்ச நீதிமன்ற தீர்ப்பு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "தேர்தல் பத்திரம் திட்டத்தின் மூலம் பாஜகவுக்கு வரக்கூடிய பணம் 52 சதவீதம்தான். திமுகவுக்கு 91 சதவீதம் வருகிறது. பாஜகவுக்கு வந்துள்ள 48 சதவீத தொகை தேர்தல் பத்திரம் இல்லாமல் வந்துள்ளது. இந்தியாவில் பாஜக மீது மக்கள் மதிப்பும் மரியாதையும் வைத்து, இந்தக் கட்சிக்கு 10 ரூபாய் கொடுத்தால், அவர்கள் சரியாக பயன்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையில் கொடுத்துள்ளனர்.

பாஜக இந்தியா முழுவதும் இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் மட்டுமே இருக்கக்கூடிய திமுகவுக்கு ரூ.600 கோடிக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி வந்துள்ளது. பாஜகவுக்கு ஒரு மாநிலத்துக்கு சராசரியாக ரூ.212 கோடி தேர்தல் பத்திரம் மூலம் நிதி வந்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துவிட்டதால் பாஜகவுக்கு எந்த இழப்பும் இல்லை.

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்ட பாஜக வேட்பாளர்கள் 5,500 பேருக்கும் காசோலையில் நிதி வழங்கினோம். இதுபோல் செய்ததாக திமுகவோ, வேறு ஏதாவது மூத்த கட்சிகளோ, இல்லை தமிழகத்தில் உள்ள ஏதாவது ஒரு கட்சி சொல்ல முடியுமா? எனவே, எங்களைப் பொறுத்தவரை இந்த தீர்ப்பால் இழப்பு ஒன்றும் இல்லை" என்று அண்ணாமலை கூறினார்.

# எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய பாஜக அலுவலகம் அமைக்க வருவாய் துறையினர் தடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது

ஊத்துக்கோட்டை, பிப்17–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் கிழக்கு ஒன்றியம், மஞ்சங்காரணை ஊராட்சியில் பெரியபாளையம்–சென்னை நெடுஞ்சாலையில் சமுதாய கூடம் அருகே இக்கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பி.எம்.ஆனந்தன் என்பவர் பாஜக ஒன்றிய அலுவலகம் திறக்க கட்டுமான பணியை கடந்த ஒரு மாத காலமாக மேற்கொண்டு வந்தார்.



கடந்த சில நாட்களுக்கு முன்னர் கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை இந்த அலுவலகத்தை திறந்து வைப்பார் என பணிகளை மேற்கொண்டு வந்தார். ஆனால்,அண்ணாமலையின் நடைப்பயணம் பெரியபாளையத்தில் இருந்து கும்மிடிப்பூண்டி மார்க்கமாக சென்றது.இதனால் மஞ்சங்காரணையில் ஒன்றிய அலுவலகம் திறப்பு விழா என்பது தள்ளி வைக்கப்பட்டது. இருப்பினும், இந்த அலுவலகத்தில் வரவேற்பு பேனர், கட்சியின் கொடி கம்பம் மற்றும் கொடி தோரணங்கள் உள்ளிட்டவை வைக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில்,நேற்று மதியம் கன்னிகைப்பேர் வருவாய் ஆய்வாளர் சரவணன், கிராம உதவியாளர் பாலா மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் திடீரென ஜெ.சி.பி இயந்திரத்துடன் வந்து ஒன்றிய அலுவலக கட்டுமான பணியை தடுத்து நிறுத்தினர். மேலும்,இந்த அலுவலகத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என கூறினார்களாம். இதனால் பாஜக ஒன்றிய நிர்வாகிகள் விரைந்து வந்து வருவாய் துறை அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு பெரியபாளையம் காவல் நிலைய போலீசார் விரைந்து வந்தனர்.பாஜக நிர்வாகிகளிடம் சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டனர். நாடாளுமன்றத் தேர்தல் வர இருப்பதால் பாஜக ஒன்றிய அலுவலகம் கட்ட அனுமதி வழங்கிட வேண்டும் என பாஜக நிர்வாகிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். எனவே, இந்தப் பிரச்சினை குறித்து ஒரு வார காலத்திற்குள் தாசில்தார் மற்றும் கலெக்டரிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வருவாய்த் துறையினர் மற்றும் காவல்துறையினர் கூறிவிட்டு ஜெசிபி இயந்திரத்துடன் அங்கிருந்து சென்று விட்டனர்.

இப்பிரச்சனையால் சுமார் 2 மணி நேரம் இப்பகுதியில் பதட்டமும்,பரபரப்பும் நிலவியது. மேலும்,இச்சம்பவம் குறித்து எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய அமைப்பாளர் சுதாகர், மாவட்ட சக்திகேந்திர பொறுப்பாளர் சுரேஷ்,மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆனந்தன்,ஒன்றிய செயலாளர் பாபுஜி உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் இப்ப பிரச்சனை குறித்து கட்சியின் தலைமை அலுவலகத்துக்கும், தேர்தல் ஆணையத்துக்கும், மாவட்ட கலெக்டருக்கும் இது குறித்து புகார் மனுவை அனுப்ப உள்ளதாக கூறினர். மேலும் இப் பிரச்சினையில் உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் அடுத்த கட்ட போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் தெரிவித்தனர்.



▶ செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருப்போரூர் ஒன்றியம் புதுப்பாக்கம் ஊராட்சியில் புதிய சிமெண்ட் சாலையை மக்கள் பயன்பாட்டிற்கு திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர், திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருப்போரூர் வடக்கு ஒன்றிய கட்சி செயலாளர், இதய வர்மன் திறந்து வைத்தார். இன் நிகழ்சியில் கட்சி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# மாணவர்கள் நன்றாக படித்து பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும்

## அரசு பள்ளி ஆண்டு விழாவில் ஊராட்சி மன்றத் தலைவர் பேச்சு

திருவள்ளூர், பிப்,17

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் கீழ்நல்லாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா தலைமை ஆசிரியை திலகமணி தலைமையில் நடைபெற்றது, அரசு பள்ளி ஆண்டு விழாவில் ஊராட்சி மன்ற தலைவர் எம். தேவதாஸ் கலந்து கொண்டு ஆண்டு விழா நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

மேலும் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை பறைசாற்றும் வகையில் பள்ளி சிறுவர்களின் பரதநாட்டியம் தெருக்கூத்து சிலம்பம் கராத்தே நடனம் நாடகம்எனசிறப்பாகநடைபெற்ற பள்ளி ஆண்டு விழாவில் மாணவச் செல்வங்களுக்கு ஊராட்சி மன்ற தலைவர் தேவதாஸ் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.



மேலும் இந்நிகழ்வில் பேசிய ஊராட்சி மன்றத் தலைவர் பெற்றோர்கள் மாணவர்களுக்கு நல்லதோர் வழிகாட்டியாக விளங்க வேண்டும் மாணவர்களை நல்வழிப்படுத்த ஆசிரியர்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் எனவும் மாணவர்கள் ஒழுக்கத்திலும் படிப்பிலும் சிறந்து விளங்கி பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பரந்தாமன் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஊராட்சி மன்ற முன்னாள் இன்னால் வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் என திரளாக கலந்து கொண்டனர்.

# 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 200 கிலோ குட்கா பறிமுதல் இருவர் கைது



எண்ணூர், பிப்.17–

சென்னை எண்ணூர் காமராஜர் நகர் பகுதியில் தமிழக அரசு தடைசெய்யப்பட்ட ஹான்ஸ் புகையிலை, கூலிப், விமல் பாக்கு விற்பனை செய்யப்படுவதாக எண்ணூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர்க்கு ரகசிய தகவல் கிடைத்தது தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றபோலீசார் சோதனையில் ஈடுபட்ட போது சுமார் 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 159 கிலோ ஹான்ஸ், 35 கிலோ கூலிப், 6 கிலோ விமல் பாக்கு பறிமுதல் செய்து இருவரை கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது எண்ணூர் பகுதியைச் சேர்ந்த வீரா (எ) வீரய்யா, கொடுங்கையூரை சேர்ந்த மணிகண்டன் என தெரியவந்து இதனையடுத்து இருவர் மீது வழக்கு பதிவுசெய்து நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். தலைமறைவாக உள்ள கார்த்திகேயன், வைத்தியலிங்கத்தை போலீசார் தேடி வருகின்றனர்

# காரைக்கால் மாவட்டத்தில் துணை நிலை ஆளுநர் அறிவுறுத்தலின் பேரில் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம்



காரைக்கால் , பிப்.17–

புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் மேதகு துணை நிலை ஆளுநர் அறிவுறுத்தலின் பேரில் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து 12:30 மணி வரை ஆட்சியர் வளாகத்தில் துணை ஆட்சியர் ஜான்சன் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் அரசு அதிகாரிகளுடன் சென்ற மாதம் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் இம்மாதம் நடைபெற்ற குறை தீர்ப்பு கூட்டம் சம்பந்தமான மனுக்கள் பெறப்பட்டன. இதில் பெரும்பாலான மனுக்கள் குடிசை மாற்று வாரியத்தில் குடியிருப்பு ஒதுக்கீடு வேண்டியும் மேலும் L G R பட்டா வேண்டியும் மஞ்சள் நிற குடும்ப அட்டையில் இருந்து சிகப்பு நிற குடும்ப அட்டையாக மாற்றி தர வேண்டியும், பள்ளி மாணவர்கள் ஸ்காலர்ஷிப் வழங்க கோரியும் மனுக்கள் பெறப்பட்டன. மேலும் சாலை வசதி மற்றும் சாக்கடைகளை சுத்தம்செய்தல் சம்பந்தமாகவும் மனுக்கள் பெறப்பட்டன, நெடுங்காட்டில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தை பராமரிக்கும் படியும் திருநள்ளாறுக்கு சுற்றுலா பேருந்துகள் விடும்படியும் மனுக்கள் பெறப்பட்டன.

இன்றைய குறை தீர்ப்பு கூட்டத்தில் சிகப்பு நிறை அட்டை வேண்டி 103 மனுக்களும் LGR பட்டா வேண்டி 16 மனுக்களும் மற்ற இதர மனுக்களாக 63 மனுக்களும் ஆக மொத்தம் 182 மனுக்கல் பெறப்பட்டன. இம்மனுக்கல் மீது குறித்த நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கும் படியும் மேலும் எடுத்த நடவடிக்கைகள் குறித்து நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ புகார்தாரர்களுக்கு தெரிவிக்க வேண்டும்எனவும்சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை துணை ஆட்சியர் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் வனத்துறை அதிகாரி விஜி உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சுபாஷ் நகராட்சி ஆணையர் சத்யா மேல்நிலைக் கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி முதன்மை கல்வி அதிகாரி விஜயமோகனா பொதுப்பணித்துறை நிர்வாக பொறியாளர் சிதம்பரநாதன் சமூக நலத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் மேலும் அனைத்து துறை அதிகாரிகள் அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் இன்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### சீர்காழி நகராட்சி நகர் மன்ற கூட்டத்தில்

# திமுக நகர்மன்ற உறுப்பினர்கள் வாயில் கருப்பு துணி கட்டிக் கொண்டு வெளிநடப்பு

சீர்காழி, பிப்.17–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சியில் நகர மன்ற சாதாரண கூட்டம் கூட்ட அரங்கில் நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகரன் தலைமையில் நடைபெற்றது.



திமுக, அதிமுக, பாமக , சுயேச்சை உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் பகுதியில் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து கோரிக்கைகளை நகர மன்ற தலைவரிடம் வைத்தனர்.

இந்நிலையில் நகர்மன்ற தலைவர் ஒரு தலை பட்சமாக செயல்படுவதாக கூறி திமுக நகர்மன்ற உறுப்பினர் 16வது வார்டு வள்ளி, 17 வது வார்டு ரம்யா, 23 வது வார்டு ரேணுகாதேவி ஆகிய திமுக நகர மன்ற உறுப்பினர்கள் நகர மன்ற கூட்ட அரங்கில் வாயில் கருப்பு துணி கட்டிக் கொண்டு தங்கள் வாழும் பகுதிகளுக்கு தேவையான சாலை, குடிநீர், மின்விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏதும் கடந்த இரண்டு வருடங்களாக செய்து தரவில்லை எனக் கூறி வாயில் கருப்பு துணி கட்டிக் கொண்டு நகர மன்ற கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.



▶ காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் வடக்கு ஒன்றியம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கட்சி செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் திருப்போரூர் வடக்கு ஒன்றிய அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மேலும் வரவேற்புரை தலைமை செயற்குழு உறுப்பினர் அன்புசெழியன் நாடாளுமன்ற தேர்தலில் தொகுதி பொறுப்பாளர் மாமன்ற உறுப்பினர் மாநில அயலக அணி துணை அமைப்பாளர் பரிதிஇளம்சுருதி கலந்து கொண்டு நிர்வாகிகளிடம் உரையாடினார். வடக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் ஜெயபால் , ரமேஷ் , ஒன்றிய பொருளாளர் ராமகிருஷ்ணன் , மாவட்ட பிரிதிநிதி கெஜராஜன் , ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கௌரிசங்கர் , ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் ஜெகன் , ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற துணை தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், கிளை கட்சி செயலாளர்கள் - நிர்வாகிகள், பூத் பொறுப்பாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தனர் .

# அரசு கல்வி நிறுவனங்களுக்கு அரசியல் தலைவர்களின் பெயர்களை சூட்ட கூடாது: மக்கள் குறை தீர்ப்பு கூட்டத்தில் சமூக ஆர்வலர்கள் மனு

காரைக்கால், பிப்.17–

காரைக்கால் மாவட்டத்தில் மாதந்தோறும் இரண்டாவது வாரத்தில் மக்கள் குறை தீர்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இன்று மக்கள் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்றது இதில் பல்வேறு தரப்பினரும் அனைத்து துறை அதிகாரிகளையும் சந்தித்து துறை சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு வருகின்றனர்.



இந்நிலையில் இன்று திருப்பட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் காதர் மைதீன் மனு ஒன்றை அளித்தார். அம்மனுவில் "அரசு கல்வி நிறுவனங்களுக்கு அரசியல் தலைவர்களின் பெயர்களை சூட்ட கூடாது எனவும் அப்படி அரசியல் தலைவர்களின் பெயர்கள் சூடப்பட்டால் நீதிமன்றத்தை நாட உள்ளதாகவும் இனிவரும் காலங்களில் புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அரசு கல்வி நிறுவனங்களில் அரசியல் தலைவரின் பெயர்களையும் சாதி மதம் சார்ந்த பெயர்களையும் பயன்படுத்த வேண்டாம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஜிகே பப்ளிக் சீனியர் செகண்டரி சிபிஎஸ்சி பள்ளியில் மாணவர்களின் அறிவியல் கண்காட்சி

காட்டுமன்னார்கோவில், பிப்.17–

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் செயல்படும் ஜி கே மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஜிகே பப்ளிக் சீனியர் செகண்டரி சிபிஎஸ்சி பள்ளியில் மாணவர்களின் தனித்திறமை வளர்க்கும் நோக்கில் அறிவியல் கண்காட்சி நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடந்தது நிகழ்ச்சிக்கு கல்வி குழும தலைவர் ஜி குமாரராஜா தலைமை தாங்கினார்.



பள்ளியின் மேலாண் இயக்குநர் ஜிகே அருண் , முன்னிலை வகித்தார் .பள்ளி தலைமை ஆசிரியர் கே. பார்த்திபன் வரவேற்றார். இரு பள்ளிகளின் அறிவியல் கண்காட்சிகளை தனியார் பள்ளிகளின் மாவட்ட கல்வி அலுவலர் எஸ்.சாந்தி மற்றும் காட்டுமன்னார்கோவிலில் தாசில்தார் வி.சிவக்குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதில் மாணவர்களின் தனித்திறமை வளர்க்கும் நோக்கில் பல்வேறு புதிய கருவிகளின் செயல்பாடுகள், இயற்கை உணவுகள் அவற்றின் பயன்பாடுகள் உள்ளிட்டவை கண்காட்சியில் இடம்பெற்றன. கண்காட்சியில் விற்பனை செய்யப்பட்ட உணவுகளின் வாயிலாக வரப்பெற்ற தொகை முழுவதும் அனாதை இல்லத்திற்கு வழங்கப்படும் என நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் புரவலர்கள் ஜி சின்னமணி பி வெங்கடாஜலபதி, அகடமிக் முதல்வர் எம் தேவதாஸ், பெற்றோர்கள், அரசு பள்ளி மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சிபிஎஸ்இ பள்ளி முதல்வர் வி எஸ் ஷெரின் பேகம் நன்றி கூறினார்.



▶ காரைக்கால் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட தோமாஸ் அருள் திடல் பகுதியில் நிலவி வரும் மின் பற்றாக்குறையை போக்கிட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் முயற்சியால் ரூபாய் 18- இலட்சம் மதிப்பீட்டில் ( 200 K .V . ) திறன் கொண்ட புதிய மின்மாற்றியினை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம்,நேற்று காலை மக்கள் பயன்பாட்டிற்கு இயக்கி வைத்தார்கள். இந்த நிகழ்வில் மின்துறை செயற்பொறியாளர் விமல்குமார், உதவி பொறியாளர் சிவகுமார், இளநிலை பொறியாளர் முருகானந்தம், மற்றும் ஊர் பெரியவர்கள் முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மேகதாது அணை கட்டும் முயற்சியை சட்ட ரீதியாக தடுக்க வேண்டும் : தினகரன் வலியுறுத்தல்

சென்னை : பிப். 17–

காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் மேகதாது அணைக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைரத்துசெய்ய முதல்வர் ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து நேற்று அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "காவிரியின் குறுக்கே மேகதாது அணைகட்டும் பணிகளில் தீவிரம் காட்டும்கர்நாடகஅரசின் பிடிவாதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது. தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்க முயற்சிக்கும் கர்நாடக அரசின் நடவடிக்கையை தடுத்து நிறுத்தி மாநில உரிமையை பாதுகாக்க வேண்டும்.

கர்நாடக மாநில நிதி நிலை அறிக்கையை நேற்று தாக்கல் செய்த அம்மாநில முதல்வர் சித்தராமையா, மத்திய அரசின் அனுமதியை பெற்று விரைவில் மேகதாது அணை கட்டப்படும் எனவும், அணைகட்டும்பணிகளை மேற்கொள்ள பிரத்யேக குழுக்கள் அமைக்கப் பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார். கடந்த பிப்ரவரி 1ம் தேதி நடைபெற்ற காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில்உச்சநீதிமன்ற உத்தரவுக்கு முரணாக மேகதாது அணை குறித்து நடைபெற்ற விவாதத்தில்தமிழகஅரசு அதிகாரிகள் பங்கேற்றது விவசாயிகளுக்குஇழைத்த மாபெரும் துரோகம் ஆகும்.

தமிழ்நாட்டின் ஜீவாதாரமான காவிரி நதிநீர் விவகாரத்தில், ஜெயலலிதா நடத்திய தொடர் சட்டப் போராட்டத்தினால் பெற்ற உரிமையை காக்க தவறிய திமுக அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் விவசாய சங்கங்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளன. எனவே, டெல்டா மாவட்டங்களை பாலைவனமாக்க முயற்சிக்கும் கர்நாடக அரசின் நடவடிக்கையை சட்ட ரீதியாக தடுத்து நிறுத்துவதோடு, காவிரி மேலாண்மைஆணையக் கூட்டத்தில் மேகதாது அணைக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் ரத்து செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறுதமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வலியுறுத்துகிறேன்." என தினகரன் கூறியுள்ளார்.



▶ தியாகி இமானுவேல் சேகரருக்கு, ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது. நேற்று இதன் அடிக்கல் நாட்டு விழாவில் அமைச்சர்கள் ராஜகண்ணப்பன், கயல்விழி செல்வராஜ், டெல்லி அரசு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, தென்காசி எம்பி தனுஷ் குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கோமாபுரம் அரசு தொடக்கப் பள்ளிக்கு பாராளுமன்ற மேலவை உறுப்பினர் தளவாட உபகரணங்கள் வழங்கினார்

கந்தர்வகோட்டை, பிப்.17–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம் கோமாபுரம் ஊராட்சியில் உள்ள அண்ணா நகர் தொடக்கபள்ளிக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை குழந்தைகள் நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 29 லட்சம் மதிப்பீட்டில் 2 வகுப்பறை கொண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது, அதனை தமிழக முதல்வர் 22 ஆம் தேதி காணொளி மூலம் திறக்க உள்ளார்.



இந்தக் கட்டடத்திற்கு தேவையான தளவாட பொருட்களை பாராளுமன்ற மேலவை உறுப்பினர் அப்துல்லா மற்றும் வடக்கு ஒன்றியச் செயலாளர் கோமாபுரம் தமிழ் ஐயா ஆகியோர் 4 லட்ச மதிப்பீட்டில் வழங்கினர், நிகழ்ச்சிக்கு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா தலைமை ஏற்று இருந்தார், நிகழ்ச்சியில் பாராளுமன்ற மேலவை உறுப்பினர் அப்துல்லா, கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர், வடக்கு ஒன்றியச் செயலாளர் கோமாபுரம் தமிழ் ஐயா அனைவரையும் வரவேற்றார், தலைமை உரையாற்றிய கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை தமிழக முதல்வர் கல்விக்கு முன்னுரிமை வழங்கி வருகிறார் என்று கூறினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிதைபித்தன் , மாவட்ட கல்வி அலுவலர் செந்தில், தெற்கு ஒன்றியச் செயலாளர் பரமசிவம், மாவட்ட கவுன்சிலர் நாராயணசாமி ஸ்டாலின், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ராஜா, வட்டார கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி, பள்ளி தலைமை ஆசிரியை மற்றும் இருபால் ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர், மாணவிகளின் கலை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது, இறுதியாக கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் அன்பு அனைவருக்கும் நன்றி கூறினார்.

# உடல் உறுப்பு தானம் வழங்குவோரின் உடலுக்கு அரசு மரியாதை : தமிழ்நாட்டைத் தொடர்ந்து ஒடிசாவிலும் அறிவிப்பு

புபனேஷ்வர் : பிப். 17-

தமிழ்நாட்டைப் பின்பற்றி ஒடிசா அரசு உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் இறுதி சடங்குகள் அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று அறிவித்துள்ளது.




தமிழக அரசு செயல்படுத்தி வரும் மகளிருக்கு மாதம் ரூ.1000 தொகை, பேருந்துகளில் மகளிருக்கு இலவச பேருந்து சேவை, காலை சிற்றுண்டி உணவு ஆகிய திட்டங்கள் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக விளங்கி வருகிறது. மற்ற மாநிலங்களும் தமிழக அரசின் திட்டங்களை ஒவ்வொன்றாக செயல்படுத்தி வருகின்றன. இந்த நிலையில் "இறக்கும் முன் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச்சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்" என கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி, தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் உடல்கள் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தமிழகத்தை போலவே ஒடிசாவும் உடல் உறுப்புகளை தானம் செய்பவர்களின் இறுதி சடங்குகள் அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று அறிவித்துள்ளது. இது தொடர்பாக பேசிய ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், உறுப்புகளை தானம் செய்யும் நபரின் உடல் மீது மூவர்ண கொடி போர்த்தி 21 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தப்படும் என்று தெரிவித்தார். மூளை சாவு அடைந்தவர்களின் உறுப்புகளை அவர்களது உறவினர்கள் தானம் செய்ய தைரியமாக முடிவெடுத்து பல உயிர்களை காப்பாற்ற வேண்டும் என்றும் நன்கொடையாளர்களின் தைரியம் மற்றும் தியாகத்தை கவுரவிப்பதே மாநில அரசின் நோக்கம் என்றும் நவீன் பட்நாயக் குறிப்பிட்டார்.



▶ தென்காசி மாவட்ட மக்களுடன் முதல்வர் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்த வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் கடையநல்லூர் முன்னாள் மாவட்டச் செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா.செல்லத்துரை தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் முன்னாள் அவைத் தலைவர் முத்துப்பாண்டியன், திட்டக்குழு உறுப்பினர் முருகன், நகரவைத் தலைவர் பெட்டி முருகன், சிட்டி திவான் மைதீன், ராமச்சந்திரன், தம்புராஜ், ஒன்றியச் செயலாளர் பா.சுரேஷ், எஸ். பி. கே. டி. குமார் இடைகால், ஒன்றிய குழு துணை தலைவர் ஐவேந்திரன் தினேஷ், முகைதீன் கனி, சிட்டி திவான் மைதீன், முதலியான் கான், கருப்பசாமி தங்கம், ரசாக், முருகானந்தம், விஜயகுமார் பொறியாளர், நல்லையா, சாமி, மதி, பண்டாரம் ஒன்றிய துணைச் செயலாளர் தமிழ்மணி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

# தமிழ்வளர்ச்சித் துறை பேச்சுப்போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று வெங்கடேஸ்வரா பள்ளி மாணவி சாதனை

புதுக்கோட்டை, பிப்.17-

பள்ளி, கல்லூரி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டுதமிழ்வளர்ச்சித்துறை மாவட்ட அளவில் பேச்சு, கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளை நடத்தி வருகின்றது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத் தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக பள்ளிமாணவர்களுக்கு பேச்சு, கவிதை கட்டுரை போட்டிகளை நடத்தியது, அதில் மாவட்டம் முழுவதிலிருந்தும் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.



ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக்.மேல்நிலைப்பள்ளி மாணவி ச. ஸ்ரீஹாசினி பேச்சுப்போட்டியில் மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்றார், பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி ஸ்ரீஹாசினிக்கு பரிசுத் தொகையாக ரூபாய் பத்தாயிரம் ரொக்கம் மற்றும் சான்றிதழை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா வழங்கினார்.

தமிழ்வளர்ச்சித்துறை நடத்திய பேச்சுப்போட்டியில் முதல்பரிசு பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவி சா.ஸ்ரீஹாசினிக்கு பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி பரிசுகள் வழங்கி பாராட்டினார், பேச்சுப்போட்டியில் பரிசுபெற்ற மாணவிக்கு பள்ளியின் துணைமுதல்வர் குமாரவேல், தமிழாசிரியை சுமதி உள்ளிட்ட ஆசிரியர்கள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# டெல்லியில் பெயிண்ட் தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து : 8 கடைகளில் பரவியதில் 11 பேர் பலி

டெல்லி : பிப். 17-

டெல்லி அலிப்பூர் தயால் சந்தையில் பெயிண்ட் தொழிற்சாலை மற்றும் குடோன்களில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

டெல்லி அலிப்பூரில் உள்ள தயால் சந்தையில் 2 பெயிண்ட் கெமிக்கல் குடோன்கள் மற்றும் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீயானது அடுத்தடுத்து மேலும் 8 கடைகளுக்கும் பரவியது. இது குறித்து தகவலறிந்ததும் சம்பவ இடத்துக்கு 8 தீயணைப்பு வாகனங்கள் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன.

எனினும் இந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும்



4 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் ஜோதி (42), திவ்யா (20), மோஹித் சோலங்கி (34) மற்றும் டெல்லி போலீஸ் கான்ஸ்டபிள் கரம்பிர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் அடையாளம் இன்னும் தெரியவரவில்லை. காயமடைந்தவர்கள் அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவைக் கப்பட்டனர்.

இந்த சம்பவத்தை நேரில் பார்த்த, சுமித் பரத்வாஜ் என்பவர் கூறுகையில், "இங்குள்ள இரு பெயிண்ட் குடோன்களில் முதலில் தீ விபத்து ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து மளமளவென அருகில் உள்ள கடைகளுக்கும் தீ பரவியது. நாங்கள் விரைந்து தீயை அணைக்க முற்பட்டோம். அதன் பிறகே தீயணைப்பு வாகனங்கள் வந்து தீயை கட்டுப்படுத்தின" என்றார்.

இதேபோல், சுனில் தாக்கூர் என்பவர், "பெயிண்ட் குடோனில் வேலைசெய்தஎனது சகோதரரை காணவில்லை. அவரது நிலை என்ன ஆனது என தெரியவில்லை" என்று கவலையுடன் கூறினார். டெல்லியில் தயால் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



▶ புதுக்கோட்டை வருவாய் மாவட்ட அளவில் 11 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்றன. இதில் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு புதுக்கோட்டை அரசு முன் மாதிரி மேல்நிலைப் பள்ளியின் 12 ஆம் வகுப்பு மாணவி சா.சபீனா பேகம் முதலிடம் பெற்றார். பள்ளி மாணவியைப் பாராட்டி ரூபாய் 10,000 ரொக்கப் பரிசும் பாராட்டுச் சான்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா வழங்கி சிறப்பித்தார். உடன் பள்ளி முதல்வர் பெ.சிவப்பிரகாசம், மாவட்ட சுற்றுச் சூழல் அலுவலர் சாலை செந்தில் குமார் மற்றும் தமிழாசிரியை இளவரசி ஆகியோர் இருந்தனர்.

# கந்தர்வகோட்டை அருகே தச்சன்குறிச்சி குகை முருகன் சுவாமிக்கு வெள்ளிக்கவசம் சாத்தல்

கந்தர்வகோட்டை, பிப்.17-

கந்தர்வகோட்டை அருகில் உள்ளதச்சன்குறிச்சிகுகையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற குகை முருகன் சுவாமிக்கு வெள்ளி கவசம் சாத்தும் நிகழ்ச்சி நேற்று சிறப்பாக நடைபெற்றது, வெள்ளிக் கவசம் சாத்தும் நிகழ்ச்சியை முன்னிட்டு வியாழக்கிழமை முதல் ருத்திரா திரிசாதியாகம், சத்குரு சம்காரயாகம் உள்ளிட்ட சிறப்பு யாகங்கள் கோயில் வளாகம் முன்பு யாகசாலை அமைக்கப்பட்டு சிவாச்சாரியார்களால் நடைபெற்றது.



தொடர்ந்து பக்தர்கள் பால்குடம், காவடி பல்வேறு வகையான சீர்வரிசை தட்டுகள் எடுத்து ஊர்வலமாக வந்து கோவிலில் சமர்ப்பித்தனர், தொடர்ந்து சிறப்பு யாகங்கள் முடிந்த பின்பு சுவாமி முருகனுக்கு வெள்ளி கவசம் சாத்தப்பட்டு பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவமியை தரிசித்துச் சென்றனர்.

# டெல்லி சலோ போராட்டத்தில் பஞ்சாபை சேர்ந்த 65 வயது விவசாயி கியான் சிங் மாரடைப்பால் உயிரிழப்பு

புதுடெல்லி : பிப். 17-

அரியானா மாநிலம், அம்பாலா அருகே ஷம்பு எல்லையில் போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளில் ஒருவர் நேற்று மாரடைப்பால் உயிரிழந்திருப்பது பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.





பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, விவசாய கடன் தள்ளுபடி, ஓய்வூதியம் உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி, 'தி சம்யுக்தா கிசான்மோர்சா, தி கிசான் மஸ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட 37 விவசாயிகள் சங்கத்தினர் பஞ்சாப் மற்றும் அரியானாவில் இருந்து டெல்லி நோக்கி செல்லும் பேரணியை கடந்த 13ம் தேதி தொடங்கினர். அவர்கள், டிராக்டர் மற்றும் டிராலிகளில் 6 மாதத்துக்கு தேவையான உணவு பொருட்களுடன் புறப்பட்டனர். இவர்களை டெல்லி நகருக்குள் நுழைய விடாமல் தடுக்க அரியானா எல்லையில் பாதுகாப்பு படையினர் தடுப்புகள் மற்றும் முள்வேலிகளை அமைத்தனர். இதனால் பஞ்சாப்-அரியானாவின் ஷம்பு எல்லையில்விவசாயிகள்ஒன்று திரண்டனர். போலீசாருக்கும் விவசாயிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால் ட்ரோன்மூலம் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் விவசாயிகளை கலைக்க அரியானா போலீசார் முயன்று வருகின்றனர்.

இதனால் தொடர்ந்து முன்னேற முடியாமல் கடந்த 3 நாள்களாக ஷம்பு எல்லையிலேயே விவசாயிகள் காத்திருக்கின்றனர். இந்நிலையில், போராட்டக் களத்தில் இருந்த கியான் சிங் (63) என்ற முதியவருக்கு நேற்று காலை நெஞ்சுவலி ஏற்பட்டது. போராட்டக்காரர்களை நோக்கி போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீச, அதிலிருந்து வெளியான புகையை சுவாசித்த கியான் சிங் அசௌகரியமாக இருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து அவர் பஞ்சாபின் ராஜ்புராவில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேல் சிகிச்சைக்காக பாட்டியாலாவில் உள்ள ராஜீந்திரா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு கியான் சிங்கை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். பஞ்சாபின் குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கியான் சிங், இரண்டு நாட்களுக்கு முன்பு சம்பு எல்லைக்கு வந்து விவசாயிகளின் 'டெல்லி சலோ' பேரணியில் பங்கேற்றார். தங்களுடன் போராட்டக்களத்தில் இருந்த விவசாயி உயிரிழந்த சம்பவம் மற்ற விவசாயிகளிடையே சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

# "மேகேதாட்டு அணை கட்ட அனைத்து ஏற்பாடுகளும் தயார்" – பட்ஜெட்டில் கர்நாடக முதல்வர் அறிவிப்பு



பெங்களூரு : பிப். 17-

காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா கர்நாடக பட்ஜெட் அறிவிப்பின்போது தெரிவித்தார்.

கர்நாடக மாநில சட்டப்பேரவையில் 2024-25 நிதியாண்டுக்கான பட்ஜெட் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. அம்மாநில முதல்வரும், நிதியமைச்சருமான சித்தராமையா பட்ஜெட் தாக்கல் செய்து பேசுகையில், "மேகேதாட்டு அணை கட்டுவதில் கர்நாடக அரசு உறுதியாக உள்ளது. காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார். அணையை கட்ட ஒரு மண்டல குழுவும், இரண்டு துணை மண்டல குழுக்களும் என சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் தற்போது அணை கட்டும்போது நீர் செல்லும் நிலப்பரப்புகள், வெட்டப்பட வேண்டிய மரங்கள் ஆய்வு செய்யும் பணியை முடித்துள்ளனர். அணை கட்டும் பகுதியில் விவசாய நிலங்கள் கையகப்படுத்தவும் ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. மத்திய அரசு அனுமதிக்காக காத்திருக்கிறோம். மத்திய அரசு அனுமதி அளித்ததும் மேகேதாட்டு அணை கட்டப்படும். முன்னுரிமை அடிப்படையில் மேகேதாட்டு அணை திட்டத்தை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பட்ஜெட் உரையில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிப்ரவரி 1-ம் தேதி நடைபெற்ற காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் மேகேதாட்டு அணையைக் கர்நாடகம் கட்டிக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தை ஆணையத் தலைவர் எஸ்.கே. ஹல்தர் நிறைவேற்றினார்.

காவிரி மேலாண்மை ஆணையக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் மேகேதாட்டு அணை குறித்த பொருளை முன்வைத்தால் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்பு செய்வதாகக் கூறி, இதுவரை தடுத்து வந்த தமிழக அரசின் நீர்வளத் துறைச் செயலர் கலந்து கொண்டது தமிழகத்தில் சர்ச்சையாக வெடித்துள்ளது. இந்த நிலையில், கர்நாடக முதல்வர் சித்தராமையா பட்ஜெட்டில் மேகேதாட்டு அணை குறித்து பேசியிருக்கிறார்.

# பெரம்பலூர் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் தமிழ் மன்றம் துவக்க விழா

பெரம்பலூர்,பிப்.17-

பெரம்பலூர் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி கீழக்கனவாயில் நேற்று காலை 11 மணி அளவில் தமிழ் மன்றம் துவக்க விழா நடைபெற்றது, விழாவினை சிறப்பு விருந்தினர் ராஜலிங்கம் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார், ஜெகதீஸ்வரி விரிவுரையாளர் இயற்பியல் துறை வரவேற்புரை வழங்கினார், கல்லூரியின் முதல்வர் முகேஷ் குமார் தலைமை உரையாற்றினார், சிறப்பு விருந்தினரை சிவசூரியன் மூன்றாம் ஆண்டு கணிப்பொறியல் துறை மாணவர் அறிமுகம் செய்தார்.



சிறப்பு விருந்தினர் பேசுகையில், தமிழ் மொழியின் பெருமையையும் தமிழ் மொழியின் தொன்மையையும் விவரித்தார்.தமிழ் மொழியை ஏன் மூத்த மொழி என்று அழைக்கின்றனர், என்பதை பற்றியும் தமிழ் இலக்கியம் ஒரு தனி மனித வாழ்வை எவ்வாறு செம்மைப்படுத்துகிறது என்பதை பற்றியும் விளக்கினார், சங்க நூல்களை மாணவர்கள் தினமும் பயின்று அதனை அவர்கள் வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

நிகழ்ச்சியின் இறுதியாக நா.விஜயா விரிவுரையாளர் கணிப்பொறித்துறை நன்றியுரை வழங்கினார், இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ஜெகதீஸ்வரி நா.விஜயா மற்றும் நதியா விரிவுரையாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர் மேலும் அனைத்து துறை தலைவர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லா பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் சார்பில் மத்திய அரசை கண்டித்து பொதுவேலை நிறுத்தம் மற்றும் சாலை மறியல் போராட்டம்

கந்தர்வகோட்டை : பிப். 17-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பேருந்து நிலையத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் லெலினிஸ்ட் கட்சியின் சார்பில் பொது வேலை நிறுத்தம் சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இதில் அகில இந்திய விவசாயகிராமப்புறதொழிலாளர் சங்கம் அகில இந்திய விவசாயிகள் மகாசபை, ஏஐசிசி, டியு மற்றும் பெண்கள் கழகம் ஆகியவை கலந்து கொண்டன. ஆர்ப்பாட்டத்தில் விவசாயத்தை அதானி, அம்பானியிடம் ஒப்படைக்காதே, 100 நாள் வேலைத்திட்டத்தை சிதைக்காதே, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்து என்பன உள்ளிட்ட பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும், 2024 இல் மோடி ஆட்சியை தோற்கடிப்போம், பத்தாண்டு கால துரோக பிஜேபி ஆட்சிக்கு முடி கட்டுவோம் என கோசங்கள் எழுப்பப்பட்டது. சாலை மறியலில் ஈடுபட்ட 33 நபர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சோதிவேல் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் வலத்தான், மாநில செயலாளர் ரேவதி, மாநில குழு உறுப்பினர் ரங்கசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் 1,598 இளைஞர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணைகளை வழங்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை : பிப். 17-

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் மற்றும் 1,598 இளைஞர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

அரசு அலுவலர்களை தேடிச் சென்று மக்கள் மனுக்களை தந்து குறைகளைத் தெரிவித்து, தீர்வு காண்பது என்பது இதுவரை நடைமுறையாக இருந்தது. ஆனால், மக்களின் நலன் நாடி நாள்தோறும் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திடும் தமிழ்நாடு முதலமைச்சர். மக்களைத் தேடி அதிகாரிகள் சென்று குறை கேட்டுத் தீர்த்துவைத்திட வேண்டும் என்று விரும்பினார். முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் மக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து அவர்களின் குறைகளைத் தீர்ப்பதில் முன்னுரிமை அளித்து வருகிறார்கள்.

அந்த வகையில், அரசு நிர்வாகத்தையும், பொதுமக்களையும் இணைக்கும் வகையில் முதலமைச்சர் மக்களுடன் முதல்வர் என்னும் ஒரு முன்னோடித் திட்டத்தை கோவை மாநகரில் 18.12.2023 அன்று தொடங்கிவைத்தார்கள். இத்திட்டத்தின்கீழ் எரிசக்தித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, காவல்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை. கூட்டுறவுத் துறை, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்



நிறுவனங்கள் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகிய 13 அரசுத்துறைகள் மூலம் மக்களுக்குப் பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன.

இந்த 13 அரசுத் துறை அதிகாரிகளுடன் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ். தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் 2058 முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த முகாம்களில் மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது 35 நாட்களுக்குள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 3 இலட்சத்து 50 ஆயிரம் மனுக்கள் மீது மக்கள் மனநிறைவு கொள்ளும் வகையில் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் பயன்பெற்ற மக்கள் முதலமைச்சரையும் இந்த அரசையும் பெரிதும் பாராட்டி வருகிறார்கள்.

இந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை கலைவாணர் அரங்கில், மகத்தான வெற்றி கண்டுள்ள "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்திருந்த பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை நேற்று வழங்கினார். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பொதுப்பணித் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, நீர்வளத்துறை, வேளாண்மைத் துறை போன்ற பல்வேறு துறைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 1,598 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார். இந்த விழாவில், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும், அரசு அலுவலர்களும், சீர்மிகு பெருமக்களும் கலந்துகொண்டனர்.

# டிஎன்பிஎஸ்சி-க்கு 5 புதிய உறுப்பினர்களை நியமித்தது தமிழக அரசு

சென்னை : பிப். 17-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு ஐந்து புதிய உறுப்பினர்களை நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.



இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: "ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி சிவனருள், முன்னாள் ஐஆர்எஸ் அதிகாரி ஆர். சரவணகுமார், மருத்துவர் ஏ.தவமணி, மேயர் சிட்டி பாபு தெருவைச் சேர்ந்த உஷா சுகுமார், கோவை ஸ்ரீநாராயணகுரு மேலாண்மை கல்வி நிறுவன முதல்வர் முனைவர் ஆர். பிரேம்குமார் ஆகிய ஐந்துபேரும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு புதிய உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஆறு வருட காலங்களுக்கு அல்லது 62 வயது வரை இப்பதவியில் நீடிப்பார்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமானது ஒரு தலைவர் மற்றும் 13 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். இதில் தலைவர் உட்பட பல உறுப்பினர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதனிடையே, காலியாக இருந்த பணியிடங்களை நிரப்பும்பொருட்டு, தற்போது 5 புதிய உறுப்பினர்களை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. ஆளுநர் ஒப்புதல் பெற்று உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஆசிய அணிகள் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்

## அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா



**மலேசியா : பிப். 17,**

**ஆசிய அணிகள் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் தொடர் மலேசியாவில் உள்ள சிலாங்கூரில் நடைபெற்று வருகிறது. அதில், நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஹாங்காங்கை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய இந்திய மகளிர் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.**

இதன் வாயிலாக வரலாற்றில் முதல் முறையாக ஆசிய அணி பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் தனது முதல் பதக்கத்தை இந்திய அணி உறுதி செய்தது. கடந்த செவ்வாயன்று (பிப் 13) நடைபெற்றபோட்டியில்இந்திய அணி 3-2 என்ற கணக்கில் சீன அணியைவீழ்த்திகாலிறுதிக்கு முன்னேறியிருந்தது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஒற்றையர் பிரிவில் விளையாடிய பிவி சிந்து 21-7, 16-21, 21-12 என்ற கணக்கில் லோ சின் யான் ஹேப்பியை தோற்கடித்தார். இரட்டையர் பிரிவில் விளையாடிய தனிஷா க்ராஸ்டோ மற்றும் அஷ்வினி பொன்னப்பா ஆகியோர் 21-10, 21-1 என்ற செட் கணக்கில் யுங் நகா டிங் & யுங் புய் லாம் ஆகியோரை தோற்கடித்தனர். அஷ்மிதா சாலிஹா 21-12, 21-13 என்ற செட் கணக்கில் யுங் சும் யீயை வென்றார்.

இந்திய மகளிர் அணிக்கு பதக்கம் உறுதியாகிவிட்ட நிலையில், முதலிடத்தில் உள்ள ஜப்பான் மற்றும் சீனா இடையிலான மற்றொரு காலிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணியை இந்தியா இறுதிப்போட்டியில் எதிர்கொள்ளும். மேலும் இந்திய ஆடவர் அணி தனது காலிறுதி ஆட்டத்தில் ஜப்பானை எதிர்கொள்கிறது.

# “லட்சத்தில் ஒரு பவுலர் அஸ்வின்” – 500 டெஸ்ட் விக்கெட்டுக்கு குவியும் வாழ்த்து





**ராஜ்கோட் : பிப். 17,**

**டெஸ்ட் போட்டிகளில் தனது 500-வது விக்கெட்டை வீழ்த்தி இந்திய வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் புதிய சாதனை படைத்துள்ளார். இவரின் இந்த சாதனையை அடுத்து பாராட்டுகள் குவிந்து வருகிறது.**

தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில், “சாதனைகளை முறியடித்து கனவுகளை செதுக்குகிறார் சென்னை பையன் அஸ்வின். தான் வீசும் ஒவ்வொரு திருப்பத்திலும் (டர்ன்), உறுதிப்பாடு மற்றும் திறமையின் கதையை பின்னுகிறார். அவரின் இந்த சாதனை ஓர் உண்மையான ஸ்பின் டாகுலர் மைல்கல்லைக் குறிக்கிறது. மாயாஜால சுழலால் கிரிக்கெட் வரலாற்றில் தனது 500-வது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்திய அஸ்வினுக்கு வாழ்த்துகள். இன்னும் அதிக விக்கெட்டுகள் மற்றும் வெற்றிகள் பெற வேண்டும் எங்களின் ஜாம்பவானே!” என்று முதல்வர் ஸ்டாலின் வாழ்த்தியுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர்: “லட்சத்தில் ஒரு பவுலரான அஸ்வினுக்கு டெஸ்ட் கிரிக்கெட்டில் 500வது விக்கெட். AshWIN the SpinNER இந்த பெயரிலேயே வின்னர் (WINNER) இருக்கிறது. டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுகள் என்பது மிகப்பெரிய மைல்கல். வாழ்த்துக்கள், சாம்பியன்!”

தனுஷ்: “வாழ்த்துகள் அஸ்வின். இது மகத்தான சாதனை. எங்களை பெருமை அடைய செய்ததற்கு நன்றி.”

டெஸ்ட் போட்டிகளில் தனது 500-வது விக்கெட்டை வீழ்த்தி இந்திய வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் புதிய சாதனை படைத்துள்ளார். ராஜ்கோட்டில் நடந்து வரும் இங்கிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்ட் போட்டியில் ஜாக் க்ராவ்லியின் விக்கெட்டை வீழ்த்தி இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார் அஸ்வின். விசாகப்பட்டினம் டெஸ்ட் போட்டியிலேயே இந்த சாதனையை படைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அந்த வாய்ப்பு தவறியது.

98-வது டெஸ்ட் போட்டியில் அஸ்வின் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். இதன்மூலம், குறைந்த போட்டிகளில் 500 விக்கெட் வீழ்த்திய இரண்டாவது வீரர் என்ற பெருமையை பெற்றார். முத்தையா முரளிதரன் 87 டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட் வீழ்த்தினார்.

அதேநேரம், இந்த சாதனையை படைப்பதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 500+ விக்கெட்களை வீழ்த்திய ஒன்பதாவது பவுலர் என்ற சாதனையை அஸ்வின் படைத்தார். முத்தையா முரளிதரன், ஷேன் வார்ன், அனில் கும்ப்ளே, லயன் போன்ற சுழற்பந்து வீச்சாளர்கள் இந்த சாதனையை இதற்கு முன்னர் படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய அளவில் இரண்டாவது பவுலர் ஆனார் அஸ்வின். அனில் கும்ப்ளே 619 விக்கெட்களை வீழ்த்தி முன்னணியில் உள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 37 வயதான அஸ்வின், கடந்த 2011 முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடி வருகிறார். இதுவரை 98 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 500 விக்கெட்களை கைப்பற்றி உள்ளார். அதோடு 3,166 ரன்களை பதிவு செய்துள்ளார். ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் நம்பர் 3வது பவுலராகவும், ஆல்ரவுண்டர்களில் 2-வது இடத்திலும் அஸ்வின் உள்ளார்.

# சர்ப்ராஸ் கான் ரன் அவுட்டானது என்னுடைய தவறுதான் : மன்னிப்பு கேட்ட ஜடேஜா



**ராஜ்கோட் : பிப். 17,**

**இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3-வது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடங்கியது.**

இதில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. இந்த போட்டியில் அதிரடியாக விளையாடி அரை சதம் அடித்த சர்ப்ராஸ் கான் 62 ரன்னில் ரன் அவுட் ஆனார். ஜடேஜா 99 ரன்னில் இருந்த போது, பந்தை அருகில் தட்டிவிட்டு ஒரு ரன்னுக்கு ஓட முயற்சித்தார். பிறகு வேண்டாம் என்று திரும்பினார். அதற்குள் எதிர்முனையில் நின்ற சர்ப்ராஸ்கான் பாதி தூரம் வந்து விட்டு திரும்புவதற்குள் மார்க்வுட்டால் பிரமாதமாக ரன்-அவுட் செய்யப்பட்டார்.

ஆட்ட நேரம் முடிய 15-20 நிமிடங்கள் இருந்த போது ஜடேஜாவின் தவறால், சர்ப்ராஸ் கான் ரன்-அவுட்டில் சிக்கியதால், வீரர்கள் ஓய்வறையில் இருந்த கேப்டன் ரோகித் சர்மா கோபத்தில் தொப்பியை தூக்கி எறிந்தார். சர்ப்ராஸ்கான் 62 ரன்களில் (66 பந்து, 9 பவுண்டரி, ஒரு சிக்சர்) வெளியேறினார்.

இந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிந்ததும் ஜடேஜா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ‘சர்ப்ராஸ்கானுக்காக வருந்துகிறேன். இந்த ரன்-அவுட் எனது தவறான அழைப்பால் தான் நடந்தது. அவர் அருமையாக ஆடினார்’ என்று கூறியுள்ளார். ‘கிரிக்கெட்டில் இது போல் நடப்பது சகஜம் தான். அதனால் இது ஒரு பெரிய விஷயமல்ல’ என்று சர்ப்ராஸ் குறிப்பிட்டார்.

இது குறித்து சர்ப்ராஸ் கான் கூறுகையில் : “இப்படி தவறான புரிதலால் அவுட்டாவது விளையாட்டின் ஒரு அங்கம். இப்படி நடப்பது சகஜம். உண்மையில் இன்னிங்ஸ் முழுவதும் ஜடேஜா என்னை வழி நடத்தினார். குறிப்பாக களத்தில் நீண்ட நேரம் நின்று விளையாடினாலே ரன்கள் தாமாக வரும் என்று அவர் எனக்கு ஆலோசனை சொன்னார். அதற்கு அவருக்கு நன்றிதான் சொல்ல வேண்டும். இறுதியில் தவறான புரிதலால் ரன் அவுட்டானதற்கு அவர் என்னிடம் வருத்தம் தெரிவித்தார். எனவே அது பரவாயில்லை” என்று கூறினார்.

# தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக இரட்டை சதம் : ஆஸ்திரேலிய வீராங்கனையின் அசத்தல் சாதனை



**ஆஸ்திரேலியா : பிப். 17,**

**தென்னாப்பிரிக்கா பெண்கள் கிரிக்கெட் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய வீராங்கனை அனபெல் சதர்லேண்ட் 210 ரன்கள் குவித்து அபார சாதனை படைத்துள்ளார்.**

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தென்னாப்பிரிக்கா பெண்கள் கிரிக்கெட் அணி, ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது. நேற்று இந்த போட்டி துவங்கிய நிலையில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய தென்னாப்பிரிக்கா பெண்கள் அணியின் முன்னணி வீராங்கனைகள் சொற்ப ரன்களில் அடுத்தடுத்து ஆட்டம் இழந்து வெளியேறினர்.

தென்னாப்பிரிக்கா அணியில் சுனே லூஸ் மட்டும் அதிகபட்சமாக 26 ரன்கள் எடுத்திருந்தார். இதனால் அந்த அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 76 ரன்கள் மட்டும் எடுத்திருந்தது. இதையடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆஸ்திரேலியா அணி துவங்கியது. அந்த அணியில் துவக்க வீராங்கனையாக களமிறங்கிய மூனி 78 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அலிசா ஹீலி 99 ரன்களில் ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். இதையடுத்து களமிறங்கிய அனபெல் சதர்லேண்ட் தென்னாப்பிரிக்க வீராங்கனைகளின் பந்துகளை நாலாபுறமும் சிதறடித்தார்.

256 பந்துகளை எதிர்கொண்ட அவர் 27 பௌண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட 210 ரன்கள் குவித்து ஆட்டம் இழந்தார். இதன் மூலம் இரட்டை சதம் விளாசிய 5வது ஆஸ்திரேலியா வீராங்கனை என்ற சாதனையை அவர் படைத்தார். இதையடுத்து 9 விக்கெட் இழப்பிற்கு 575 ரன்கள் எடுத்திருந்தபோது, ஆஸ்திரேலியா கேப்டன் அலிசா ஹீலி டிக்ளேர் செய்தார். இதைத் தொடர்ந்து தென்னாப்பிரிக்க பெண்கள் அணி தனது 2வது இன்னிங்ஸ் துவங்கி விளையாடி வருகிறது.

# தென்னாப்பிரிக்காவை ஒயிட் வாஷ் செய்த நியூசிலாந்து : சதமடித்து கேன் வில்லியம்சன் புதிய சாதனை



**நியூசிலாந்து : பிப். 17,**

**தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் கேன் வில்லியம்சனின் அதிரடி காரணமாக நியூசிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை ஒயிட்வாஷ் செய்தது.**

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தென்னாப்பிரிக்கா கிரிக்கெட் அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்ற நிலையில், 2வது டெஸ்ட் போட்டி கடந்த 13ம் தேதி செடான் பூங்கா மைதானத்தில் துவங்கியது. தென்னாபிரிக்கா அணி முதல் இன்னிங்ஸில் 242 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 235 ரன்கள் எடுத்தது. முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து 216 ரன்கள் எடுத்திருந்த நிலையில், 267 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2வது இன்னிங்ஸை தொடங்கியது.

துவக்க ஆட்டக்காரர் டாம் லேதம் 30 ரன்களும், கான்வே 17 ரன்களுக்கும் ஆட்டம் இழந்து வெளியேறினர். இருப்பினும் நிலைத்து நின்று ஆடிய கேன் வில்லியம்சன் அதிரடியாக விளையாடி சதத்தை பூர்த்தி செய்தார். இது அவரது 32வது சர்வதேச டெஸ்ட் சதமாகும். இதன் மூலம் பல்வேறு சாதனைகளை கேன் வில்லியம்சன் படைத்துள்ளார். அதிவேகமாக 32 சதங்களை விளாசியவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். 172 இன்னிங்ஸ்களில் விளையாடி உள்ள வில்லியம்சன், இதுவரை 32 சதங்களை விளாசியுள்ளார். இவருக்கு அடுத்தபடியாக ஸ்மித் 174 இன்னஙஸில் 32 சதங்களும், பாண்டிங் 176 இன்னிங்ஸில் 32 சதங்களும் விளாசியுள்ளனர்.

ரச்சின் ரவீந்தரா 20 ஆட்டம் இழந்த போதும், கேன் வில்லியம்சனுக்கு உறுதுணையாக களமிறங்கிய வில்யங் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த கேன் வில்லியம்சன் 260 பந்துகளில் 12 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட 133 ரன்கள் எடுத்திருந்தார். வில் யங் ஆட்டமிழக்காமல் 60 ரன்கள் எடுத்திருந்தார். இதையடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி தொடரை வென்றுள்ளது.

வரலாறு சினிமா

# உடல்நலம் குறித்த டிப்ஸ் வழங்க யூடியூப் சேனல் தொடங்கினார் சமந்தா



**ஐதராபாத் : பிப். 17,**

**மயோசிடிஸ் என்ற தசை அழற்றி நோய் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்ட சமந்தா, அதிநவீன சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார்.**

தற்போது ஓரளவு உடல்நிலை தேறியுள்ள அவர், மீண்டும் சினிமாவில் தீவிரமாக செயல்பட இருப்பதாக தெரிவித்தார். இந்நிலையில், சில நாட்களுக்கு முன்பு சமூக வலைத்தளத்தில் வீடியோ வெளியிட்டிருந்த அவர், விரைவில் உடல்நலம் குறித்த டிப்ஸ் வழங்க சேனல் தொடங்குவதாக அறிவித்திருந்தார்.

அதன்படி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிமுக வீடியோவில், ‘டேக் 20’ என்ற யூடியூப் சேனலை தொடங்கியுள்ளதாக தெரிவித்தார். தன்னுடன் அல்கேஷ் என்பவர் பேசுவார் என்று கூறியுள்ளார். உடல்நலம் குறித்த டிப்ஸ்களை வழங்கும் இந்த சேனலின் முதல் வீடியோ, வரும் 19ம் தேதி வெளியாகிறது. ஏற்கனவே பிரதியுஷா என்ற அமைப்பின் மூலம் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு உதவி செய்து வரும் சமந்தா, சகி என்ற புடவை பிராண்ட் மூலம் நெசவாளர்களுக்கும், ட்ராலாலா என்ற தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் சின்ன கலைஞர்களுக்கு திரைப்பட வாய்ப்புகள் கிடைக்கவும் வழி செய்துள்ளார்.

# விஜயின் அரசியல் பயணத்தில் தேவைப்பட்டால் கூட நிற்பேன் : நடிகர் சமுத்திரக்கனி பேட்டி



**தென்காசி : பிப். 17,**

**விஜய் தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் அரசியல் கட்சியை தொடங்கி இருப்பதாகவும், வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் விரும்பும் அடிப்படை அரசியல் மாற்றத்திற்க்காக வழிவகுப்பது தான் நமது இலக்கு என்றும் அரசியல் பணிகளில் ஈடுபடவுள்ள காரணத்தால்தான் சினிமாவை விட்டு விளங்குவதாகவும் அறிவித்து இருந்தார்.**

விஜய் அரசியல் வருவது குறித்து பல சினிமா பிரபலங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் என பலரும் தங்களுடைய கருத்துக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகிறார்கள். அந்த வகையில், கார்த்திக் சுப்புராஜ், காளிதாஸ் ஜெயராம், சனம் ஷெட்டி, வாணிபோஜன், சதிஷ், அர்ச்சனா கல்பாத்தி உள்ளிட்ட பலரும் தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்து இருந்தார்கள்.

அவர்களை தொடர்ந்து நடிகரும் இயக்குனருமான சமுத்திரக்கனி சமீபத்திய பேட்டி ஒன்றில் விஜய் அரசியல் வருகை குறித்து பேசியுள்ளார். இது குறித்து பேசிய அவர் ” விஜய் அரசியலுக்கு வந்ததை பார்க்கையில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அவர் எவ்வளவு பெரிய ஸ்டாராக இருக்கிறார். அதனை சினிமாவை விட்டு விலகி அரசியலுக்கு வருவது பெரிய விஷயமாக நான் பார்க்கிறேன். அவர் அரசியலுக்கு வந்து மக்களுக்கு எதாவது செய்யவேண்டும் என்று நினைக்கிறார். அவருக்கு நான் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். தேவைப்பட்டால் அவருடன் அரசியல் பயணத்தில் கூட நிற்பேன். அவர் கூப்பிட வேண்டும் என்கிற அவசியம் எல்லாம் இல்லை. நல்ல விஷயங்களுக்கு நான் எப்போதுமே கூட நிற்பேன்” எனவும் நடிகர் சமுத்திரக்கனி தெரிவித்துள்ளர்.

# “குற்ற உணர்ச்சியாக இருந்தது” – ‘பேட்ட’ கதாபாத்திரம் குறித்து நவாசுதின் வருத்தம்



**மும்பை : பிப். 17,**

**ரஜினியின் ‘பேட்ட’ படத்தில் வில்லனாக நடித்தது குறித்து பேசிய பாலிவுட் நடிகர் நவாசுதீன் சித்திக், அந்தப் படத்தில் தான் பலவீனமாக இருந்ததாகவும், அது தனக்கு மிகவும் குற்ற உணர்ச்சியை தந்ததாகவும் தெரிவித்துள்ளார்.**

2019-ம் ஆண்டு பொங்கல் வெளியீடாக திரைக்கு வந்தப் படம் ‘பேட்ட’. கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் ரஜினி, விஜய் சேதுபதி, சிம்ரன், பாபி சிம்ஹா, த்ரிஷா, சனந்த் ரெட்டி, மேகா ஆகாஷ், குரு சோமசுந்தரம், ராம்தாஸ், ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். வசூல் ரீதியாக வரவேற்பை பெற்ற இப்படத்தில் பாலிவுட் நடிகர் நவாசுதீன் சித்திக் வில்லனாக நடித்திருந்தார். ஆனால், அதில் அவருக்கான பலமான கதாபாத்திரம் வழங்கப்படவில்லை என அப்போதே பலரும் விமர்சித்தனர்.

இந்த நிலையில், சமீபத்தில் பேட்டி ஒன்றில் பேசிய நவாசுதீன், ‘பேட்ட’ படத்தில் பணிபுரிந்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அதில் அவர் பேசும்போது, “நான் ரஜினியுடன் நடித்த ‘பேட்ட’ படத்தின் படப்பிடிப்பு முடிந்த பிறகு நான் மிகுந்த குற்ற உணர்ச்சியில் இருந்தேன். காரணம், என்ன செய்கிறேன் என்றே தெரியாத ஒரு விஷயத்துக்காக நான் பணம் பெற்றுக் கொண்டதாக எனக்கு தோன்றியது.

நான் அவர்களை முட்டாள்கள் ஆக்கிவிட்டேன். ஏனெனில், நான் அங்கு வெறுமனே வாயசைத்துக் கொண்டுதான் இருந்தேன். அங்கு நடந்த பல விஷயங்கள் எனக்கு புரியவில்லை. நான் பணம் பெற்றுக் கொண்ட ஒரு விஷயத்தில் நான் மிகவும் பலவீனமாக இருந்தேன். என்னால் அதை புரிந்துகொள்ள முடியவில்லை. அது எனக்கு மிகவும் குற்ற உணர்ச்சியாக இருந்தது” என்று தெரிவித்தார்.

கடந்த மாதம் தெலுங்கில் வெளியான ‘சைந்தவ்’ படத்தில் நவாசுதின் சித்திக், விகாஸ் மாலிக் என்ற வில்லன் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். வெங்கடேஷ் நாயகனாக நடித்த இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது.

# ராமம் ராகவம் கிளிம்ப்ஸ் வெளியானது



**சென்னை : பிப். 17,**

**இயக்குனர் தன்ராஜ் கொரனானி இயக்கத்தில் தயாராகி இருக்கும் திரைப்படம் ‘ராமம் ராகவம்’.**

இதில் சமுத்திரக்கனி, ஹரிஷ் உத்தமன், தன்ராஜ் கொரனானி, சத்யா, மோக்ஷா சென் குப்தா, பிரமோதினி, ஸ்ரீனிவாஸ் ரெட்டி, பிரித்விராஜ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். துர்கா பிரசாத் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு அருண் இசையமைத்திருக்கிறார்.

திரைப்படத்தை சிலேட் பென்சில் ஸ்டோரீஸ் பட நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் ப்ருத்வி பொலவரபு தயாரித்திருக்கிறார். தெலுங்கு, தமிழ் என இரு மொழிகளில் தயாராகும் திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் அண்மையில் வெளியாகி பெரும் கவனத்தை ஈர்த்தது. காதலர் தினத்தை முன்னிட்டு இப்படத்தின் கிளிம்ப்ஸ் வெளியிடப்பட்டிருக்கிறது.

# 3டி படத்துக்கு இசையமைக்கும் திபு நினன் தாமஸ்



**சென்னை : பிப். 17,**

**‘மரகத நாணயம்’ படத்தின் ‘நீ கவிதைகளா’ பாடல் முதல், ’சித்தா’ படத்தின் சமீபத்திய சூப்பர்ஹிட் பாடலான ‘கண்கள் ஏதோ’ வரை பல படங்களில் பணியாற்றியவர் இசையமைப்பாளர் திபு நினன் தாமஸ்.**

‘கனா’ படத்தின் ஆல்பம் இவரை ஒரே இரவில் இன்னும் பிரபலமாக்கியது. இந்தப் படத்தின் மொத்த ஆல்பமும் ‘வாயாடி பெத்த புள்ள’ மற்றும் ‘ஒத்தையடி பாதையில்’ பாடல்கள் மூலம் 800 மில்லியன், 450 மில்லியன் பார்வைகளை யூடியூபில் பெற்றுள்ளது.

அதேபோல, ‘பேச்சுலர்’ படத்திலிருந்து இவரது ‘அடியே’ பாடலும் பிரபலமானது. ஸ்பாட்டிஃபை தளத்தில் 100 மில்லியனுக்கும் அதிகமான ஸ்ட்ரீம்களை எட்டிய முதல் தென்னிந்திய பாடல் என்ற சாதனையை இந்தப் பாடல் வைத்துள்ளது. ஸ்பாட்டிஃபை தளத்தில் இவ்வளவு அதிக பார்வையாளர்களை அடைந்த முதல் தென்னிந்திய இசையமைப்பாளர் இவர்தான்.

இப்போது மனு ஆனந்த் இயக்கத்தில் ஆர்யா, கவுதம் கார்த்திக் நடிக்கும் ‘மிஸ்டர். எக்ஸ்’ படம், ஜிதின் லால் இயக்கத்தில் டொவினோ தாமஸ் நடிப்பில் ஐந்து மொழிகளில் 3டியில் வெளியாகும் பான்-இந்தியப் படமான’ அஜயந்தே ரெண்டம் மோஷனம்’ மற்றும் இன்னும் நான்கு தமிழ்ப் படங்களுக்கு இசையமைப்பதாக திபு நினன் தாமஸ் தெரிவித்தார்.



# வரலாறு உலகம்

## காசா மருத்துவமனைக்குள் இஸ்ரேல் படை
## ஆக்சிஜன் துண்டிப்பால் 4 நோயாளிகள் பலி



**காசா : பிப். 17,**

**இஸ்ரேல் படைகள் தெற்கு காசாவின் பிரதான மருத்துவமனையான நாசர் மருத்துவமனையில் சோதனை நடத்தி வரும் நிலையில், அங்கு மின்சாரம் தடைபட்டிருக்கிறது. இதனால் ஆக்சிஜன் உதவியும் நிறுத்தப்பட்டதால் நான்கு நோயாளிகள் உயிரிழந்தனர்.**

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில், தெற்கு காசாவின் பிரதான மருத்துவமனையான கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவமனைக்குள், ஹமாஸ் அமைப்பு ஊடுருவி உள்ளதாகவும், அங்கு இஸ்ரேல் பிணைக்கைதிகளைமறைத்து வைத்திருப்பதாகவும், இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. ஆனால் ஹமாஸ் அமைப்பு இதனை மறுத்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் ராணுவப் படையினர் மருத்துவமனைக்குள் புகுந்து சோதனை நடத்தி வருகின்றனர். இது குறித்து காசா சுகாதாரத் துறை அமைச்சகம் சார்பில் கூறும்போது, "மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் நிறுத்தப்பட்டன, அதோடு மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. இதனால் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஆக்சிஜன் உதவி துண்டிக்கப்பட்டிருக்கிறது. இதனால் நோயாளிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகியிருக்கின்றனர். தற்போது, நான்கு நோயாளிகள் உயிரிழந்தனர்.

மேலும், தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள நோயாளிகளின் நிலை, மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் நிலை கவலையளிக்கிறது" எனத் தெரிவித்தனர்.

முன்னதாக, மருத்துவமனையில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களும், நோயாளிகளும் வெளியேற தனிப்பாதைஒன்றைஇஸ்ரேல் படைகள் திறந்திருந்தனர். இந்த தாக்குதலை தொடர்ந்து மருத்துவமனை வளாகத்தில் பதற்றம் நீடித்து வருகிறது. காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 28,775 பாலஸ்தீனர்கள் உயிரிழந்திருக்கின்றனர். மேலும் 68,552 பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் தலைமையிலான தாக்குதலில் இஸ்ரேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 ஆக உள்ளது.

## கிரீஸ் நாட்டில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்துக்கு அனுமதி



**ஏதென்ஸ் : பிப். 17,**

**உலகம் முழுவதும் தன்பாலின ஈர்ப்பாளர்கள் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது.**

அவர்கள் தாங்கள் சட்டப்படி திருமணம் செய்து கொள்ள அனுமதிக்க வேண்டும், தங்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் பெரும்பாலான நாடுகள் இதனை சட்டப்பூர்வமாக அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில் கிரீஸ் நாட்டில் தன்பாலின ஈர்ப்பாளர்கள்திருமணத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மசோதா அந்நாட்டு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த சட்ட மசோதாவுக்கு 176 உறுப்பினர்கள் ஆதரவுடன் ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது. இந்த சட்டத்தின் மூலம் ஒரே பாலினத்தை சேர்ந்த ஜோடியினர் திருமணம் செய்து கொள்ளவும், குழந்தைகளை தத்தெடுக்கவும் உரிமை வழங்கப்படுகிறது.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதால் தன்பாலின ஈர்ப்பாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஏதென்ஸ் நகர வீதிகளில் அவர்கள் ஆடிப்பாடி கொண்டாடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். ஒருவருக்கொருவர் இனிப்புகளை கொடுத்து மகிழ்ந்தனர். இது தொடர்பாக தன்பாலின ஈர்ப்பாளர்கள் அமைப்பின் தலைவர் ஸ்டெல்லா பெலியா கூறும் போது, "இது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. இது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க தருணம் ஆகும்" என்று தெரிவித்தார். இந்த திருமணத்துக்கு ஆர்த்த டாக்ஸ் கிறிஸ்தவ நாடுகளில் ஒன்றான கிரீஸ் முதன் முதலாக ஒப்புதல் வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஓட்டல் உரிமையாளர் சுட்டுக்கொலை

**வாஷிங்டன் : பிப். 17,**

**ஓட்டல் உரிமையாளர் படுகொலைக்கு 'ஆசிய அமெரிக்க ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம்' கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள ஷெப்பீல்ட் பகுதியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரவீன் ராவோஜிபாய் பட்டேல் (வயது 76) என்ற நபர் ஓட்டல் ஒன்றை நடத்தி வந்தார். இவர் சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக ஷெப்பீல்ட் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் வில்லியம் ஜெரி மூர் (வயது 34) என்ற நபர், தங்குவதற்கு ஒரு அறை தேடி பிரவீன் பட்டேலின் ஓட்டலுக்கு வந்துள்ளார். அப்போது இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அந்த சமயத்தில் வில்லியம் ஜெரி, தன்னிடம் இருந்த துப்பாக்கியைஎடுத்துபிரவீன் பட்டேல் மீது இரண்டு முறை சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.


இந்த துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த பிரவீன் பட்டேல், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது தொடர்பாக விசாரணை நடத்திய ஷெப்பீல்ட் போலீசார், குற்றவாளி வில்லியம் ஜெரியை கைது செய்தனர். மேலும் கொலை செய்வதற்காக



அவர் பயன்படுத்திய துப்பாக்கியையும் போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த கொலை சம்பவத்திற்கு அமெரிக்காவில் உள்ள 'ஆசிய அமெரிக்க ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம்' கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவில் கடந்த சில மாதங்களாக இந்திய-அமெரிக்கர்கள் மீதான தாக்குதல் மற்றும் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்திரேலியாவில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்தியர் உயிரிழப்பு



**சிட்னி : பிப். 17,**

**ஆஸ்திரேலியாவில் இந்தியாவைச் சேர்ந்த பெண் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தார்.**

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அம்மாகாணத்தின் மவுண்ட் இஷா பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இந்தியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த தகவலை ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ளது. உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும், தூதரக ரீதியான உதவிகளை செய்ய அவர்களுடன் தொடர்பில் இருந்து வருவதாகவும் இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

## இந்திய மாணவர்கள் மீதான தொடர் தாக்குதல்கள் குறித்து வெள்ளை மாளிகை தகவல்



**அமெரிக்கா : பிப். 17,**

**கடந்த சில வாரங்களில் அமெரிக்காவில், அடுத்தடுத்து இந்திய மாணவர்கள் மீது தாக்குதல் நிகழ்ச்சிகள் நடப்பது உலகெங்கும் உள்ள இந்தியர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.**

கடந்த ஜனவரியில் ஜியார்ஜியா மாநில லித்தொனியாவில், விவேக் சாய்னி எனும் மாணவர் போதை பழக்கத்திற்கு அடிமையானவரால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். பிப்ரவரி மாத தொடக்கத்தில் சையத் மசாஹிர் அலி எனும் இந்தியாவை சேர்ந்த அமெரிக்க பல்கலைக்கழக மாணவர் தாக்கப்பட்டார். ஒகையோ மாநிலத்தில் நிர்வாக மேலாண்மை பட்டம் படித்து வந்த இந்தியாவை சேர்ந்த ஸ்ரேயஸ் ரெட்டி பெனிகேரி உயிரிழந்தார்.

இந்திய அமெரிக்க சமூகத்திற்கான தலைவர் அஜய் ஜெயின் புடோரியா இது குறித்து தெரிவித்ததாவது: வெவ்வேறு சம்பவங்களில் பல இந்திய மாணவர்கள் உயிரிழப்பது, இந்தியர்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை கோடிட்டு காட்டுகிறது. கல்லூரிகளும், காவல்துறையும் இணைந்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இத்தகைய சம்பவங்களினால் மாணவர்களின் பெற்றோர்களும், உறவினர்களும், இந்தியாவில் மிகுந்த மன வருத்தத்திலும் அச்சத்திலும் உள்ளனர். அவர்களின் கவலையை போக்கும் வகையில் அனைத்து கட்டமைப்புகளையும் வலுப்படுத்த வேண்டும் என்று ஜெயின் கூறினார்.

இது குறித்து தேசிய பாதுகாப்பு கவுன்சிலுக்கான வெள்ளை மாளிகையின் செய்தித்தொடர்பாளர் ஜான் கிர்பி தெரிவித்ததாவது: இனம், மதம், பாலினம் உள்ளிட்ட எந்த காரணங்களுக்காகவும் வன்முறை சம்பவங்கள் நடப்பதை அமெரிக்கா ஒரு போதும் சகித்து கொள்ளாது. அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் நிர்வாகம், அமெரிக்காவில் தங்கி படித்து வரும் இந்திய மாணவர்கள் மீது நடைபெறும் தாக்குதல்களை தடுக்க அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் அதிபர் ஜோ பைடன் தீவிரமாக உள்ளார். மாநில அரசுகளுடனும், உள்ளூர் நிர்வாகத்துடனும் மத்திய அரசு கலந்தாலோசித்து தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தங்கள் செயலுக்கு பொறுப்பேற்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்று கிர்பி தெரிவித்தார்.

## ராணுவ பட்ஜெட்டை அதிகரிக்கும் கட்டாயத்தில் சுவிட்சர்லாந்து



**சுவிட்சர்லாந்து : பிப். 17,**

**முதல் மற்றும் இரண்டாம் உலக போர்களில் ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்து, எந்த அணியிலும் சேராமல் நடுநிலை வகித்து வந்தது. இரண்டாம் உலக போர் முடிந்த பிறகும் உலகில் நடைபெற்ற போர்களில், சுவிட்சர்லாந்து எந்த நாட்டிற்கும் ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கவில்லை.**

இதனால் அந்நாடு உலக நாடுகளில் "நியூட்ரல்" சுவிட்சர்லாந்து என அழைக்கப்பட்டது. அமைதியை விரும்பும் நாடாக போரில் ஈடுபடாமல் தொடர்ந்து இருந்து வந்ததால், ராணுவத்திற்கு இதுவரை சுவிட்சர்லாந்து மிக குறைந்த அளவே செலவு செய்து வந்தது. சமீப சில வருடங்களாக உலகில் நடைபெறும் போர்களினால் அதிகரித்துள்ள அமைதியின்மை பல நாடுகளுக்கு போர் குறித்த சித்தாந்தங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த போர்கள் சுவிட்சர்லாந்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. சுவிட்சர்லாந்தின் ராணுவ அமைச்சர் வயோலா அம்ஹர்ட் தெரிவித்ததாவது: அடுத்த 4 வருடங்களில் ராணுவ செலவினங்களுக்கான பட்ஜெட் 19 சதவீதம் வரை அதிகரிக்கப்பட உள்ளது. கடந்த 30 வருடங்களாக ராணுவ செலவினங்களை குறைத்து வந்துள்ளதால் நாட்டின் ராணுவத்தின் வலிமை குறைந்துள்ளது. இழந்த வலிமையை மீட்டு எடுக்க சில ஆண்டுகளாகும்.

அடுத்த 12 வருடங்களில் ராணுவம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்த உள்ளோம். இந்த அணுகுமுறை தற்போதுதான் முதல்முறையாக கடைபிடிக்கப்படுகிறது என்று வயோலா கூறினார்.

ஐரோப்பிய கண்டத்தில் இருந்தாலும், 27 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியத்தில் சுவிட்சர்லாந்து இணையவில்லை. அதிகமாக ஒதுக்கவுள்ள நிதியால், ரேடார் அமைப்புகளை மேம்படுத்துதல், குறைந்த தூர ஏவுகணைகளை உருவாக்குதல், ராணுவ டேங்குகளை அதிகரித்தல், சைபர் தாக்குதலை எதிர்கொள்ளும் கட்டமைப்பை உருவாக்குதல் என பல திட்டங்களை சுவிட்சர்லாந்து செயல்படுத்த உள்ளது.

முதல் மற்றும் இரண்டாம் உலக போர்களில் நடுநிலைமை வகிக்க முடிந்த சுவிட்சர்லாந்திற்கு, ரஷிய-உக்ரைன் போர் மற்றும் இஸ்ரேல்-ஹமாஸ் போர் ஆகிய 2 போர்களால் நாட்டின் எதிர்கால திட்டங்களையே மாற்ற நேரிட்டது குறிப்பிடத்தக்கது.

## 2,00,000 ஃபேஸ்புக் பயனர்களின் தனிப்பட்ட தகவல்கள் இணையத்தில் அம்பலம்

**அமெரிக்கா : பிப். 17,**

**ஃபேஸ்புக் பயனர்களின் தனிப்பட்ட தகவல்கள் இணையத்தில் மற்றுமொரு முறை கசிந்துள்ளது. இம்முறை சுமார் 2 லட்சம் ஃபேஸ்புக் பயனர்கள் தங்களது தனிப்பட்ட தகவல்களை இழந்துள்ளனர்.**

ஃபேஸ்புக் பயனர்களின் தனிப்பட்ட தகவல்கள் இணையத்தில் கசிவது இது முதல் முறையல்ல. 2021-ல் சுமார் 530 மில்லியன் ஃபேஸ்புக் பயனர்களின் தனிப்பட்ட தகவல்கள் இணையத்தில் கசிந்து அதிர்ச்சியை ஏற்படுத்தின. 2019-லும் இதே போன்றொதொரு கசிவுக்கு ஃபேஸ்புக் ஆளானது. 2021 விவகாரத்தில் பயனர் தனியுரிமையைப் பாதுகாக்கத் தவறியதாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் 265 மில்லியன் யூரோ அபராதத்துக்கு ஃபேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டா ஆளானது.

ஆனபோதும் பயனர்களின் தனிப்பட்ட தரவுகள் கசிவதை ஃபேஸ்புக் தவிர்க்கத் தவறி வருகிறது. இம்முறை ஃபேஸ்புக்கின் மார்க்கெட் பிளேஸ் உடன் தொடர்புடைய 2 லட்சம் பயனர்களின் தனிப்பட்ட தரவுகள் இருள் இணையத்தில் வெளியாகி உள்ளன. பெயர், தொலைபேசி எண், மெயில் முகவரி மற்றும் ஃபேஸ்புக்கில் பயனர் பதிவிட்டிருக்கும் அனைத்து சுயவிவரத் தகவல்களும் பகிரங்கமாக வெளியாகி உள்ளன. வழக்கம்போல இவை விற்பனைக்கும் கிடைக்கின்றன.

இவை ஹேக் செய்யப்பட்டனவா அல்லது ஃபேஸ்புக் பாதுகாப்பு வளையத்தின் குளறுபடியா என்ற தகவல் மெட்டா தரப்பிலிருந்து இன்னமும் வெளியாகவில்லை. 2021-ம் ஆண்டின் தரவு கசிவின்போது ஃபேஸ்புக்கின் மூன்று தூண்களான மார்க் ஜுக்கர்பெர்க், கிறிஸ் ஹியூஸ் மற்றும் டஸ்டின் மோஸ்கோவிட்ஸ் ஆகியோரின் தொலைபேசி எண்களும் வெளியுலகில் கசிந்து அதிர்ச்சியை ஏற்படுத்தின.

ஹேக் செய்யப்படுவது, பாதுகாப்பில் குறைபாடு ஆகியவற்றுக்கு அப்பால், கேம்ப்ரிட்ஜ் அனாலிடிகா போன்ற சர்ச்சைகளின்போது, ஃபேஸ்புக் நிறுவனமே தங்களது பயனர்களின் தனிப்பட்ட விவரங்களை மூன்றாம் ஏஜென்சிகளுக்கு திறந்து விட்டதாக குற்றசாட்டுக்கு ஆளானது. இதன் மூலம் தேசங்களின் தேர்தல் கண்ணோட்டத்தையும் பாதிக்க முடியும் என்ற அதிர்ச்சியையும் ஃபேஸ்புக் தந்தது.

ஃபேஸ்புக் பயனர்கள்



தங்களது தனிப்பட்ட தரவுகள் இணையத்தில் வெளியாவதை தடுக்க, பல்வேறு அடுக்கிலான பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்வது அவசியமாகிறது. இதற்கு ஃபேஸ்புக் கணக்கில் பயனர் தனது அமர்வுகளை அவ்வப்போது சரிபார்ப்பது முக்கியம். ஃபேஸ்புக் தளத்தில் கிடைக்கும் செயலிகள் மற்றும் கேம்ஸ் ஆகியவற்றை இயக்கும் முன்னராக அவற்றின் நிபந்தனைகளை ஆராய்வதன் மூலமாக அவற்றை ஏற்பதா மறுப்பதா என்பதை முடிவு செய்துகொள்ளலாம்.

பொதுவாக ஃபேஸ்புக் போன்ற சமூகவலைதளங்களில் அவசியமின்றி பிறந்த தேதி, வங்கியுடன் தொடர்புடைய அலைபேசி எண், பணியாற்றும் நிறுவனம் உள்ளிட்ட அடிப்படைத் தகவல்களை தவிர்ப்பது நல்லது; அல்லது அவற்றை தெளிவற்றதாக பதிவிடலாம். இவற்றுக்கு அப்பால் அவ்வப்போது பாஸ்வேர்டுகளை மாற்றுவது மற்றும் 2 அடுக்கு சரிபார்ப்புகளை மேற்கொள்வது ஆகியவற்றையும் பின்பற்றலாம்.

## அரிய சீன மருந்திற்காக அழிக்கப்படும் ஆப்பிரிக்க கழுதைகள்



**ஆப்பிரிக்கா : பிப். 17,**

**சீனாவில், கழுதை தோலில் உள்ள ஜெலட்டின் மூலப்பொருளால் தயாரிக்கப்படும் ஒரு அரிய வகைபண்டையமருந்திற்கான தேவை அதிகரித்துள்ளதால் ஆப்பிரிக்காவின் பல நாடுகளில் கழுதைகள் களவாடப்படுவது அதிகரித்துள்ளது.**

உடல் ஆரோக்கியத்தை அதிகரிக்கவும், இளமையை நீட்டிக்கவும், தூக்கமின்மையை போக்கவும், குழந்தை பாக்கியத்தை அதிகரிக்கவும் உதவும் "எஜியாவோ" எனும் மருந்திற்காக, கழுதைகளின் தோல்களை வேக வைத்து, அதில் பல பொருட்களை சேர்த்து பொடியாகவும், மாத்திரையாகவும், மருந்தாகவும் சீனாவில் விற்கப்படுகிறது.

இந்திய கிராமங்களில் கோழி, ஆடு, மாடு, எருமை வளர்ப்பில் பலர் ஈடுபடுவது தொன்று தொட்டு நடைபெறுகிறது. அதே போல் பல ஆப்பிரிக்க நாடுகளில் குடிநீர், உணவு, பெரும் சுமை தூக்குவது உள்ளிட்ட பல வேலைகளுக்கு கழுதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உலகின் 53 மில்லியன் கழுதைகளில் 3ல் 2 பங்கு ஆப்பிரிக்க நாடுகளில் உள்ளன. கழுதை தோலுக்கு அதிக விலை கிடைப்பதால், அவற்றை பலர் களவாடுவது அதிகரித்துள்ளது. திருடு போகும் கழுதைகளின் எலும்புக்கூடுகள் ஆங்காங்கே கண்டறியப்படுவதாக கழுதைகளின் உரிமையாளர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

1990களில் சீனாவில் 11 மில்லியனாக இருந்த கழுதைகளின் எண்ணிக்கை 2021 காலகட்டத்தில் 2 மில்லியனுக்கும்கீழே குறைந்து விட்டது. இதையடுத்து, சீன நிறுவனங்கள், தங்கள் தோல் தேவைக்கு ஆப்பிரிக்க நாடுகளை சார்ந்துள்ளன. தற்போது வரை எஜியாவோ உற்பத்திக்கு எத்தனை கழுதைகள் களவாடப்பட்டன எனும் சரியான புள்ளிவிவரம் வெளியிடப்படவில்லை.

2013ல் $3.2 பில்லியனாக இருந்த எஜியாவோவிற்கான சந்தை மதிப்பு, 2020ல் $7.8 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது மேலும் உயர்ந்தால், கழுதை இனத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால், கழுதை தோல் ஏற்றுமதிக்கு முழுமையான தடை விதிக்க வேண்டும் என ஆப்பிரிக்க நாடுகளில் விலங்கின ஆர்வலர்கள் குரல் கொடுக்க துவங்கியுள்ளனர்.

## உலக வெப்பம் – உருகும் பனி அழியும் அபாயத்தில் பனிக்கரடிகள்





**ஆர்க்டிக் : பிப். 17,**

**ஆர்க்டிக் கடல் பகுதியில் வாழும் அரிய வகை உயிரினத்தை சேர்ந்தவை, பனிக்கரடிகள். இவை சுமார் 30 வருடங்கள் வரை உயிர் வாழக் கூடியவை.**

ஆர்க்டிக் கடற்கரையோர பகுதிகளில் காணப்படும் "ரிங்க்ட் சீல்" எனும் உயிரினங்களையும், பெலுகா திமிங்கிலங்கள், ஆர்க்டிக் மான்கள் உள்ளிட்டவைகளையும் வேட்டையாடி உண்டு பனிக்கரடிகள் வாழ்கின்றன. உலகம் முழுவதும் சில ஆண்டுகளாக நிகழும் பருவகால மாற்றங்களால் ஆர்க்டிக் பனிப்பிரதேசத்தில் "பனி உருகல்" அதிக தீவிரமடைந்துள்ளது.

ஆண்டுக்காண்டு உலக வெப்பமயமாதல் அதிகரிப்பதால் பனிப்பாறைகள் குறைந்து வருகின்றன. கோடை காலங்களில் பல ஆர்க்டிக் பிரதேசங்களில் பனிப்பாறைகள் முற்றிலும் குறைந்து விட்டது. இதனால் "ரிங்க்ட் சீல்" உயிரினங்கள், கரைக்கு வருவதில்லை.

இதன் தொடர்ச்சியாக, பனிக்கரடிகள் தங்கள் உணவு தேவைக்கு கடற்கரையோரம் கிடைக்கும் பறவைகளின் முட்டைகள், கனிகள், புற்கள் ஆகியவற்றை உண்டு வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக பனிக்கரடிகள் உடல் எடை கணிசமாக குறைந்து வருவது ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஒரு வளர்ந்த ஆண் பனிக்கரடி, 600 கிலோகிராம் வரை எடையுள்ளவை.

இதன் காரணமாக பனிக்கரடிகள் விரைவில் உயிரிழக்க வாய்ப்புள்ளதாகவும், பனிக்கரடிகளின் இனமே அழிந்து விடும் அபாயம் உள்ளதாகவும் சுற்றுச்சூழல் வல்லுனர்கள் எச்சரிக்கின்றனர். 1980களில், கட்டுப்பாடின்றி வேட்டையாடியதால் பனிக்கரடிகளின் எண்ணிக்கை குறைந்தது. பல சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு பின் பனிக்கரடிகளை வேட்டையாடுதல் தடை செய்யப்பட்டது.


அதைதொடர்ந்து அதிகரித்த அந்த உயிரினம், தற்போது உலக வெப்பமயமாதலால் அதிகரிக்கும் "பனி உருகல்" காரணமாக உணவுக்கு வழியின்றி தவிப்பதால், மீண்டும் அழியும் அபாயத்தில் உள்ளது.

## காதலர் தினத்தில் கருணைக் கொலை : கரம் கோத்து உயிர்நீத்த முன்னாள் பிரதமரும் மனைவியும்

**நெதர்லாந்து : பிப். 17,**

**நெதர்லாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் ட்ரைஸ் வான் அக்ட் மற்றும் அவரது காதல் மனைவி யூஜீன் ஆகியோர் ஒருவருக்கொருவர் கரம் கோத்தபடி 93 வயதில் காதலர் தினமான பிப்.14, புதன்கிழமை கருணைக் கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் நெகிழ்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.**

நெதர்லாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் ட்ரைஸ் வான் அக்ட் இவரது மனைவி யூஜீன். ட்ரைஸ் வான் கடந்த 1977 மற்றும் 1982ம் ஆண்டுகளில் நெதர்லாந்து கிறிஸ்டியன் டெமாக்ரடிக் அப்பீல் கட்சியின் தலைவராக இருந்தவர். 93 வயதான ட்ரைஸூம் அவரது மனைவி யூஜீனும் வயோதிகம் காரணமாக நோய்வாய்ப்பட்டு இருந்தனர். அதனால் தங்களை கருணைக் கொலை செய்துவிடும்படி இருவருமே அந்நாட்டு அரசுக்கு கோரிக்கை விடுத்து இருந்தனர்.



நெதர்லாந்து நாட்டில் தம்பதிகளாக கருணை கொலை செய்யப்படுவதற்கு அனுமதி அளிக்கும் சட்டம் 2020 முதல் அமலில் இருந்து வருகிறது. இதன்படி 2020-ல் 26 தம்பதியும், 2021-ல் 32 தம்பதியும், 2022-ல் 58 தம்பதியும் அவர்களின் கோரிக்கையை ஏற்று கருணைக் கொலை செய்யப்பட்டனர்.

அந்த வகையில் காதல் தம்பதியரான ட்ரைஸ் - யூஜீன் காதலர் தினமான பிப்.14, புதன்கிழமை ஒன்றாக கரம் கோத்தபடி தங்களது வாழ்க்கையை முடித்துக் கொண்டனர். சுமார் 70 ஆண்டு காலம் இணைபிரியாது வாழ்ந்த இந்த தம்பதியர் ஒன்றாக உயிரிழந்த சம்பவம் நெதர்லாந்து நாட்டு மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# டெல்லி சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை கொண்டு வந்தார் முதல்வர்





# தமிழக பாஜக மக்களவைத் தேர்தல் பொறுப்பாளராக அமர்பிரசாத் ரெட்டி நியமனம்

# டிஎன்பிஎஸ்சி-க்கு 5 புதிய உறுப்பினர்களை நியமித்தது தமிழக அரசு உத்தரவு




சென்னை / புதுக்கோட்டை | 17.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கொத்தமங்கலம் சீனு , தமிழ் நாடகத், திரைப்பட நடிகர், கருநாடக இசைப் பாடகர் (பி.1910) (இ.2001)



பசவ பிரேமானந்த் , கேரள மெய்யியலாளர், இறைமறுப்பாளர் (பி.1930) (இ.2009)



வடிவேல் பாலாஜி , தமிழ் தொலைக்காட்சி நகைச்சுவை நடிகர், திரைப்பட நடிகர் (பி.1975) (இ.2020)



ஏ பி டி வில்லியர்ஸ் , தென்னாப்பிரிக்கத் துடுப்பாளர் (பி.1984)



## இன்றைய நினைவு நாள்

எஸ். வையாபுரிப்பிள்ளை , தமிழறிஞர், பதிப்பாளர் (பி.1891) (இ.1956)



ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி , இந்திய-அமெரிக்க மெய்யியலாளர் (பி.1895) (இ.1986)



கர்ப்பூரி தாக்கூர் , பீகாரின் 11வது முதலமைச்சர் (பி.1924) (இ.1988)

